Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

குடும்பத் தலைவிகளுக்கு ஓர் நற்செய்தி

ஊறுகாய் வகைகள், அனைத்து தானிய மா வகைகள், அயடீன் கலந்த உப்பு, ரசப் பவுடர், திடீர் தோசைமா, அப்பக்கலவை, பேக்கிங்பவுடர் இன்னும் பல நீங்கள் பெற்றிட

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான

முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

777 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். Phone : 222 7894

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 04 (19.10.2004) செவ்வாய்க்கிழமை இதழ்: 19

## இந்திய ராணுவத் தளபதி கொழும்புக்கு வருகிறார்!



(புதுடெல்கி)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் விஜய் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருப்பதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள இவர், எத்தனை நாட்கள் இங்கு தங்கியிருப்பார் என்பது குறித்த விபரங்களை அது வெளியிடவில்லை.

எனினும், இந்த விஜயத்தின் போது இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் விஜய் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தின சிறி விக்கிரமநாயக்கவையும், முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்த விருப்பதாக புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்தன.

இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபர் குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

நேற்று மதியம் விமானம் மூலம் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கிய பொலிஸ் மா அதிபர் - பொலிஸார் மற்றும் படையினரின் பலத்த பாதுகாப்புடன் வாகனத் தொடரணியாக யாழ்.நகருக்கு விஜயம் செய்தார்.

இவர் நல்லூர் கந்தன் ஆலயத்துக்குச் சென்று அங்கு வழிபாடு செயத பின்னர், யாழ். மாவட்ட போர் நிறுதத்க் கண்கண்காணிப்புக் குழு பிரதிநிதி றொனிபியகனை யாழ். மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் மதியம் 1.30

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி ஆதரவு; சந்திரிகா மௌனம்!

### ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு சரித்திரத்தில் முதல் தடவையாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு வழங்க முன்வந்த நிலையில், ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக மௌனமாகவிருப்பது கவலைக்குரிய விடயமாகுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஒஸ்லோ பிரகடனத்துக்கு அமைவாகவோ, ரோக்கியோவில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு அமைவாகவோ எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்டப் பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பம்!

## புங்கன்குளம் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலை புங்கன்குளப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

புங்கன்குளச் சந்திக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அரியாலையைச் சேர்ந்த கந்தையா கனகரட்ணம் (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

## கேணல் சூசை ஐரோப்பா விஜயம்?



(கொழும்பு)

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நேற்று நண்பகல் ஹெலிகொப்டர் மூலம் கிளி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலை புங்கன்குளப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

புங்கன்குளச் சந்திக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அரியாலையைச் சேர்ந்த கந்தையா கனகரட்ணம் (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே மேற்படி குடும்பஸ்தர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிரெதிரே வந்த மினிபஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்மட்டப் பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பம்!

(கொழும்பு)

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொள்வது தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுக்கள் இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளதாக உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.**

இலங்கையின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து ஆலோசனைகளை நடத்துவதற்காக இந்தியாவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் இரவு கொழும்புக்கு வந்து சேர்ந்தது.

ஐவர் கொண்ட இந்தக் குழுவில் இந்தியாவின் உயர்மட்ட பாதுகாப்பு நிபுணர்கள் இடம்பெற்றிருப்பதாகவும் - இந்தக் குழுவுக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமை வகிப்பதாகவும் தெரியவருகிறது.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக ஆலோசனை செய்யப்பட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)



(கொழும்பு)

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நேற்று நண்பகல் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்குக் அழைத்துவரப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்காகவே இவர் கொழும்புக்கு வந்ததாகவும், தற்போது ஐரோப்பாவில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவுடன் இவரும் இணைந்துகொள்ள விருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# மட்டக்களப்பில் நேற்றும் இளைஞர் சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - இருதயபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கரவெட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பாக்கியநாதன் (வயது - 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட சடலத்தின் மார்பிலும், தலையிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை ஆரம்பிக்க வலியுறுத்துமாறு

# ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை!

(பிரஷெல்ஸி)

ஐரோப்பாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பெல்ஜியத்தில் அந்நாட்டின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரி மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

பெல்ஜியம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் கிறிஸ்ரியன் மொன்னோபரவை அந்நாட்டின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியற்குழுவினர் வடக்கு - கிழக்கில

(12 ஆம் பக்கம் பார்க்க)



# நிமால் கொலை சூத்திரதாரியை சட்டத்தின் முன் நிறுத்தக் கோரி அடையாள எதிர்ப்புப் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நான்காவது ஆண்டு நினைவுதினமான இன்று -

இந்தப் படுகொலையின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் -

வடக்கு - கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் இன்று யாழ்.நகரில் அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வரிப்பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரச ஊழியர்கள் மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும்!

## அரச அதிபர் பத்மநாதன் தெரிவிப்பு

(சங்கானை)

மக்கள் செலுத்துகின்ற வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெற்றுக் கொள்ளும் அரச ஊழியர்களான நாம் அவர்களுக்கான சேவையை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். என யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

அண்மையில் அராலியில் நடைபெற்ற சமுர்த்தி வங்கிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அரச அதிபர் மேலும் தனதுரையில்-

தற்போதுதைய அரச அலுவலர்கள் தம்முடைய நிலையை உணர்வதில்லை. தம்மை மறந்தே விடுகிறார்கள். நாம் எல்லோரும் மக்களால் செலுத்தப்படும் வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெறுகின்றோம். இதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை உணர்ந்தால் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் வேலை செய்ய முடியும். அவர்களுக்காக எம்மால் உழைக்க முடியும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் எனத் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச செயலர் ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு உரையாற்றும் போது -

சமுர்த்தி வங்கிக்கான அடிக்கல்லை இன்று நாட்டி வைக்கிறோம். இந்தக் கட்டடத்தை கூடிய விரைவில் கட்டி முடித்து இந்த வருட இறுதிக்குள் திறப்புவிழாவையும் நடத்தி முடிக்க வேண்டும். அதற்காக இப்பிரதேச மக்களும் அரச உத்தியோகத்தர்களும், பொது அமைப்புக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

இந்தவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரகுமார் தனதுரையில் -

பத்து சமுர்த்தி வங்கிகள் யாழ். மாவட்டத்தில் அமைக்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால், ஆறு வங்கிகளுக்குரிய நிதி ஒக்கீடு மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றில் இந்த வங்கியும் ஒன்றாகும். எனவே, கிடைத்த நிதியைக் கொண்டும் பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் முயற்சியுடனும் கூடியவிரைவில் இந்தக்கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு திறப்பு விழாவை விரைவில் நடாத்தி முடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அலுவலர்கள் சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். (48)

## வாணி விழா

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் வாணி விழா நாளை மாலை 2 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், கூட்டுப்பிரார்த்தனை, சரஸ்வதி பாமாலை ஓதல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (14)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்லையா மகேந்திரம் (5917 52790 v) கீரிமலை றோட், சித்தங்கேணி என்பவரது தேசிய அடையாள அட்டை ஆனைக கோட்டை வீதி யூடாக கொக்குவில் - ஏழாலைக்கி டையில் மணிபர்சுடன் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தகவல் செ.மகேந்திரம் அம்பாள் லோன்றி, ஆனைக்கோட்டை. (C/3279)

## இலங்கை சாரணர் சங்கத்தின் கில்வெல் மீள் ஒன்றுகூடல் நிகழ்வு!

இலங்கை சாரணர் சங்கத்தின் கில்வெல் மீள் ஒன்றுகூடல் நிகழ்வு இலங்கையில் 92 வருடங்களின் பின்னர், முதன்முதல் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய சாரணர் மாவட்டங்களும் ஒத்தாசை வழங்குகின்றன.

இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக சாரணத் தலைவர்களுக்கான உயர்விருதான தரு சின்னம் பெற்ற 225 பேர் பெற்றுக்கொள்கின்றனர்.

சாரணியத்தின் மூலம் நிரந்தர சமாதானத்திற்கு வழி வகுப்போம் என்ற கருப்பொருளில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வின்போது சமாதானப் பேரணியும், சிரமதானமும் விசேட நிகழ்வாக இடம்பெறும். இவை சாரணியத்தின் இன, மத பேதமற்ற கோட்பாட்டினை வெளிக்கொணர்வதாகவும், ஆற்றுப்படுத்துவதாகவும் அமையும்.

இந்நிகழ்வில் பிரதம ஆணையாளர், பிரதிப் பிரதம ஆணையாளர், தேசிய பயிற்சி ஆணையாளர் உட்பட இலங்கைச் சாரணர் சங்க முக்கியஸ்தர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவப்பணியகப் பொறுப்பாளர், கல்விக்கழக பொறுப்பாளர், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ் மாவட்ட அரச அதிபர் உட்பட ஏனைய பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சுவாஸினீ பூசையும் குமாரீ பூசையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோவிலில் நவராத்திரி காலங்களில் விசேட அபிஷேக ஆராதனைகளும், பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

நவராத்திரி தினத்தின் விசேட தினமாகிய எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சுவாஸினி பூசையும், குமாரீ பூசையும், குருபூசையும் இடம்பெறவுள்ளது.

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

சர்வதேச நூலக வாரத்தை முன்னிட்டு பிறைட் புத்தக நிறுவனம் நடாத்தும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் இன்று பண்டத்தரிப்பு, உயர்தர மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## தென்மராட்சி பிரதேச செயலகம் டச்சு வீதிக்கு இடமாற்றம்

தென்மராட்சி பிரதேசத்திற்கான பிரதேச செயலர் அலுவலகம் நேற்று முதல் சாவகச்சேரியில் உள்ள டச்சு வீதியில் வலயக் கல்விப் பணிமனைக்கு சமீபமாக உள்ள தனியாருக்கு சொந்தமான வீடு ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலமும் இந்தப்பிரதேச செயலர் அலுவலகம் கண்டி வீதியில் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் வீடு ஒன்றில் இயங்கி வந்தது

முன்பு செயற்பட்ட இடத்தில் செயலக நிர்வாகத்திற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினாலேயே இது இடம் மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தென்மராட்சி பிரதேச செயலக்கத்திற்கென புதிய கட்டடம் ஒன்று, முன்பு பிரதேச செயலகம் அமைந்திருந்த பழைய காணியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இங்கு ஆரம்பிக்கப்பட்டுவரும் கட்டடப் பணிகள் மிக மந்த கதியில் நடைபெற்று வருவதனாலேயே இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலகம் அடிக்கடி இடம்மாற வேண்டி ஏற்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## திருநெல்வேலி – ஆடியபாதம் வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது!

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி கடந்த 3 வருட காலத்துக்கும் மேலாக திருத்தப்படாமல் இருந்துள்ளது. இந்த வீதியில் தான் ஊனமுற்றோர் சங்கமும் அமைந்திருந்தது.

ஒவ்வொரு நாளும் பல ஊனமுற்றவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைக் கடந்த ஆண்டு நல்லூர் பிரதேசசபைக்கு பல பொதுமக்களும், ஊனமுற்றோர் சங்கமும் சுட்டிகாட்டியிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு கடந்த சனிக்கிழமை முதல் தமது சபை நிதியில் இந்த வீதியை பிரதேச சபை திருத்தியமைத்துள்ளது.

## செங்குந்தா சந்தை வாய்க்கால் திருத்தும் பணி நேற்று ஆரம்பம்!

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தைக்கு முன்னாக உள்ள கழிவு வாய்க்கால் துப்புரவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால் கடந்த பல மாதங்களாக திருத்தப்படாமல் இருந்தது. இதற்குள் கடைக்காரர்கள், மற்றும் பொதுமக்கள் தம் கழிவுப் பொருட்களைப் போட்டு வந்துள்ளனர்.

இதனால் இவ் வாய்க்காலில் புற்கள் முளைத்து நீர் வழிந்தோடாமல் தேங்கி நின்றது.

இதனால், அண்மைக்காலமா[illegible] இப்பகுதியில் துர்நாற்றம் வீச[illegible] தொடங்கியது. இது தொடர்பாக பிரதேசசபைக்கு சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து நல்லூர் பிரதேச சபையினர் நேற்று முதல் இந்த வாய்க்காலில் இருந்து கழிவுகளை அகற்றும் பணியினைமேற்கொண்டு வருகின்றனர்.

## சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவில் சிற்பங்கள் அமைப்பதற்கான செலவை வர்த்தக சங்கம் ஏற்றுக்கொண்டது!

தற்போது யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்டு வரும் சுப்பிரமணியப் பூங்காவில் அழகிய பொம்மை வடிவிலான சிற்பங்களைச் செய்வதற்கு யாழ்ப்பாண வர்த்தக சங்கம் உதவி செய்ய முன்வந்துள்ளது.

இந்தப் பூங்கா அண்மைக்காலமாக யாழ்.மாநகர சபையால் புனரமைக்கப்பட்டு வருகிறது. இங்கு கடந்த வாரம் கற்கள் பறிக்கப்பட்டு எல்லைப் பகுதிக்கு தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டு வந்துள்ளன.

தொடர்ந்து இந்தப் பகுதியில் அழகிய சிற்பங்களை அமைக்க வேண்டியிருந்தது. இதனால், இந்தச் சிற்பங்கள் அமைப்பதற்கா[illegible] முழுச்செலவையும் தாம் தருவதாக வர்த்தக சங்கம் மாநகர சபைக்[illegible] அறிவித்துள்ளது.

இந்தப் பூங்காவில் 3 அடி உயரமான தனித்துவமான சிற்பம் ஒன்று மிக விரைவில் வைக்கப்படவுள்ளதாகவும் மாநகர ஆணையாளர் கலாநிதி குணராஜா தெரிவித்தார்.



சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆனைப்பந்தி மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.இராசலிங்கம் மற்றும் அதிபர் சோமேஸ்வரபிள்ளை ஆகியோருடன் ஆசிரியர்களும் நிற்பதைக் காணலாம்.

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் நடாத்திய கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டி முடிவுகள்**

சித்திரம்

1ம் பரிசு வ.பாலமுருகன் - நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

2ம் பரிசு செ.சிறிலோகநாதன் - 80 பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

3ம் பரிசு செ.ஜெசிபா - C/o T. முரளிதரன், சில்வர் கொம்பனி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்:

N.றன்ஜித்குமார் - 2ம் வருடம் சித்திரமும் வடிவமைப்பும், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

ச.தருமதாஸ் - சித்திரமும் வடிவமைப்பும், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

கட்டுரை

1ம் பரிசு ப.ராஜேஸ்வரன் - 257, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

2ம் பரிசு பொ.சுதாஜினி -நவ ஒளி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

3ம் பரிசு ந.லோஜனவனிதை- 185/1 கண்டி வீதி, சாவகச்சேரி.

ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்:

திருமதி ம.மாலாதேவி - மங்குனியன் வளவு, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

திரு.க.குணரெத்தினம் - சங்குவேலி தெற்கு, மானிப்பாய்,

*பரிசளிப்பு தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.*

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், 63, பலாலி வீதி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/3277) தொ.பே.இல: 222 5932

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் (ரீல்ஸ்) நடித்த

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00,10.00 (பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கை -யிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G றெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

# கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையத்தை இந்திய நிறுவனம் திருமலையில் அமைக்கிறது!

## பங்குகளை வெளியிட்டு நிதி திரட்ட நடவடிக்கை

(சென்னை)

**திருகோணமலையிலுள்ள எரிபொருள் குதங்களை குத்தகைக்கு எடுத்திருக்கும் இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனம், 18 கோடி இந்திய ரூபா செலவில் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அமைத்து வருவதாகவும்,**

**இதன் ஒரு கட்டமாக 1 கோடி 33 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான பங்குகளை அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிட விருப்பதாகவும் அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக - ஐ.ஓ.சி நிறுவனத்தின் இயக்குநர் எம்.நாகேஸ்வரன் சென்னையில் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது -

ஈராக் போரையடுத்து, பெற்றோலியப் பொருள் தட்டுப்பாட்டை தடுப்பதற்காக, இலங்கை அரசு 2000 ஆம் ஆண்டில் இந்திய அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இரு நாடுகளிடையே நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இலங்கை பெற்றோலியத் துறையில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் பங்கேற்புக்கு அந்த நாடு அனுமதி வழங்கியது. இதையடுத்து ஐ.ஓ.சியின் சார்பு நிறுவனமாக இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனம் தொடங்கப்பட்டது.

இலங்கையில் விற்பனை செய்வதற்காக இந்த நிறுவனம் ஆண்டுக்கு 6 லட்சம் தொன் பெற்றோலியப் பொருட்களைக் கொள்முதல் செய்துவருகிறது. இதன் மொத்த மதிப்பு 900 கோடி இந்திய ரூபா வாகும்.

இந்தியாவிலிருந்து பெற்றோலியப் பொருட்கள் மும்பை, சென்னை துறைமுகங்கள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படுகிறது. பெற்றோல், டீசல், மண்ணெண்ணை, மசகு எண்ணெய் உட்பட பல்வேறு பெற்றோலியப் பொருட்கள் சி.பி.சி.எல். நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. 2003 - 2004 ஆம் ஆண்டில் இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனம் 1453 கோடி இந்திய ரூபாவுக்கு வியாபாரம் செய்துள்ளது. இதில் 57 கோடி இந்திய ரூபா இலாபம் கிடைத்துள்ளது. அடுத்த நிதி ஆண்டில் (2004-2005) 3200 கோடி இந்திய ரூபாவுக்கு வியாபாரம் செய்யவும், 240 கோடி ரூபா இலாபம் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனம் நவம்பர் மாதம் 3 ஆவது வாரத்தில் 1 கோடியே 33 லட்சம் பங்குகளை வெளியிடவுள்ளது. பங்கு ஒன்றின் விலை 22 முதல் 30 இந்திய ரூபா வரை இருக்கும். பெரும்பான்மையானவர்கள் கேட்கும் விலையை நிர்ணயித்து, புக்பில்டிங் முறையில் இந்தப் பங்குகள் விற்பனை செய்யப்படும்.

இலங்கையில் திருகோணமலை அருகே 18 கோடி ரூபா செலவில் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைக்கப்படுகிறது. திருகோணமலை துறைமுகவளாகத்தில் தொடங்கியுள்ள இந்தப் பணி 2006 ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும்.

இதன் மூலம் ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளிலிருந்து சிங்கப்பூர் உள்ளிட்ட கீழ் திசைநாடுகளுக்கு செல்லும் கப்பல்கள் இங்கு வந்து எரிபொருள் நிரப்பலாம்.

திருகோண மலையில் கப்பல் எரிபொருள் நிலையம் அமைப்பதால், சேது சமுத்திர திட்டத்துக்கு பாதிப்பு ஏற்படாது. திருகோணமலையில் 15 ஆயிரம் மெற்றிக்தொன் கொள்ளளவு கொண்ட லூப்பிளாண்டிங் தளம் அமைக்கப்படுகிறது. இதன் மூலம் இலங்கையில் மசகுபொருள் வணிகத்தில் இலங்கை ஐ.ஓ.சி. முதலிடம் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தங்கம் கடத்த முயன்ற பயணி சுங்க அதிகாரிகளால் விசாரணை

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து நேற்றுக் காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வந்தடைந்த பயணி ஒருவரை சுங்க அதிகாரிகள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பயணி 71லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட பொழுதே சுங்க அதிகாரிகள் இவரைத் தடுத்து வைத்துள்ளனர்.

இவர் அண்மைக்காலத்தில் சிங்கப்பூருக்கு சென்று வந்துள்ளார் என்பது ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# வட - கிழக்கு சிங்கள மக்களுக்காக தமது குரல் எப்போதும் ஒலிக்குமாம்!

## அமைப்பின் காப்பாளர் கூறுகிறார்

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களது பிரச்சினைகளை அரசுக்குத் தெரியப்படுத்துவதற்கு போதியளவு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் இருக்கின்றன.

முஸ்லிம்களுக்கும் போதியளவு வசதிகள் இருக்கின்றன. ஆனால் சிங்களவர்களின் பிரச்சினையைச் சொல்வதற்கும், அவற்றைத் தீர்ப்பதற்கும் வடக்கு - கிழக்கில் யாரும் இல்லை. இதனால்தான் வடக்கு-கிழக்கில் சிங்கள அமைப்பொன்று உதயமானது.

இவ்வாறு அந்த அமைப்பின் காப்பாளர் தெய்யோவிட்ட பியதிஸ்ஸ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்து ,விடுதலை செய்யப்பட்ட ஊர்காவற்படையினர் இருவரையும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலையானதுடன் எமது பயணம் நின்றுவிடப் போவதில்லை. சிங்களவர்களுக்கு எழும் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு எங்களுடைய அமைப்புக்கே உண்டு.

எதிர்வரும் காலங்களில் தோன்றும் பிரச்சினைகளுக்கு நாங்கள் குரல்கொடுக்கத் தயாராகவுள்ளோம். எமது அமைப்பை இனவாத அமைப்பென ஜே.வி.பினர் கூறினாலும், நாங்கள் இனவாதிகள் அல்ல. நாங்கள் தமிழ்-முஸ்லிம் மக்களையும் விரும்புகிறோம்.

அதிகாரத்துக்கு வந்தவர்கள் சுகங்களோடு தூங்குவதால், மக்களது துன்ப ஒலிகள் அவர்களின் காதுகளுக்கு எட்டுவதில்லை. அதிகாரத்திற்கு வந்தபின்னர் அவர்கள் மக்கள் மத்தியில் வருவதும் இல்லை.

ஊர்காவற்படையினரின் விடுவிப்புக்காக எமது அமைப்பு நடத்திய ஹர்த்தால், உண்ணாவிரதங்களால் அதிகமானோர் வசதியீனங்களுக்கு உட்பட்டனர். ஆனால் ஒரு தேசிய அமைப்பு என்ற ரீதியிலேயே நாங்கள் அதனைச் செய்தோம்.

ஆனால், எமது போராட்டத்திற்கு சந்தோஷமான தீர்வு கிடைத்ததால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்தனர்

(கொழும்பு)

கண்டியிலுள்ள ஜனாதிபதி வாசஸ்தலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பிரதம மகா நாயக்க தேரர்கள் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள், நாட்டின் அரசியல் சூழ்நிலை மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்தும், விரைவில் நடைபெறவுள்ள பிரதேசசபைத் தேர்தல் குறித்துமே இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பௌத்த பீடாதிபதிகளைச் சந்திக்க முயற்சியெடுத்ததன் விளைவாக, மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து விரிவாக ஆராய்ந்தமையும், அஸ்கிரிய பீடாதிபதி இவர்களுடனான தமது சந்திப்பை சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பின் காரணமாக இறுதி நேரத்தில் ரத்துச் செய்திருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# தம்மலோக தேரரும் விலகினார்

(கொழும்பு)

பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய ஜாதிக ஹெல உறுமயவில் தொடரும் உட்பூசல் காரணமாக, பொதுச்செயலாளர் வண. உடுவே தம்மலோக தேரோவும் அந்தக் கட்சியிலிருந்து எதிர்வரும் புதன்கிழமை இராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார்.

இந்தத் தகவலை உடுவே தம்மலோக தேரோ ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் வெளியிட்டார்.

கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் மட்டுமன்றி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் தான் இராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வண.கொலன்னாவ ஸ்ரீ சுமங்கல தேரோ இராஜினாமாச் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# 75 ஹெரோயின் குளிசைகள் மீட்பு

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வந்தவரின் வயிற்றுக்குள் இருந்து 75ஹெரோயின் அடங்கிய குளிசைகள் மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்கவை வந்தடைந்த பாகிஸ்தானியர் ஒருவரிடம் இருந்தே இந்தக் குளிசைகள் மீட்கப்பட்டன. இவற்றின் பெறுமதி 15 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மாதத்தில் மட்டும் இவ்வாறு விழுங்கிய நிலையில் ஹெரோயின் கடத்திவரப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

## அன்ரன் பாலசிங்கம் எழுதிய

# போரும் சமாதானமும் நூல் வெளிவந்துள்ளது!

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய "போரும் சமாதானமும்" என்ற அரசியல் வரலாற்று ஆய்வு நூல் வெளிவந்துள்ளது.

514 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வு நூல், தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணயப் போராட்ட வரலாற்றை ஆழமாகவும், துல்லியமாகவும் எடுத்து விளங்குகின்றது.

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமான விடுதலைப்புலிகள் அமைப்பு முன்னெடுத்த புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சி பற்றிய வரலாற்று ஆய்வுடன், விடுதலைப்புலிகள் கலந்துகொணட சமரச முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்களும் இந்த நூலில் வெளிவந்துள்ளன.

போர்க்களத்திலும், சமாதான அரங்கிலும் தமிழரின் உரிமைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் எவ்வாறு முன்னெடுத்துச் சென்றனர் என்பதை 'போரும் சமாதானமும்' என்ற இந்த நூலில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விரிவாக விளக்கியுள்ளார். இந்த நூலின் முதற்பகுதி தமிழ்த் தேசியத்தின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி பற்றிய காலனீத்துவ ஆட்சியிலிருந்து, இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறை வடிவங்களும், அவற்றுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அமைதிவழி அரசியல் போராட்டங்களும் எவ்விதம் தமிழ் தேசியப் பற்றுணர்வை தட்டி எழுப்பி, தமிழ் மக்களை ஒன்றுபட்ட தேசிய சக்தியாக உருவாக்கியது என்பதை இந்தப் பகுதியில் விபரமாக எடுத்துக் கூறப்படுகிறது. அமைதி வழிப் போராட்டங்கள் சிங்கள ஆயுதப் படைகளால் ஒடுக்கப்பட்டதை அடுத்து, மூர்க்கமாக எழுந்த அரச வன்முறைக்கு எதிராக, வன்முறைப் பாதையை நாடவேண்டிய சூழ்நிலைக்கு புரட்சிகரத் தமிழ் இளம் சமூகம் தள்ளப்பட்டது.

1970 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தீவிரவாத தமிழ் இளைஞரின் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. இப்புறநிலையில், தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, ஒரு தலைமறைவு கெரில்லா போராட்டக்குழு என்ற நிலையிலிருந்து, எவ்வாறு தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகப் படிநிலை வளர்ச்சியை எய்தியது என்பதை இந்தநூல் விபரமாக எடுத்து விளக்குகிறது.

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை அடுத்து, தமிழரின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்ட கொந்தளிப்பான கால கட்டத்தையும், இக் காலவிரிப்பில் இந்திய அரசு மேற்கொண்ட அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகளையும், இவற்றின் ஒட்டுமொத்த விளைவுகளால் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்கொண்ட சிக்கலான பிரச்சினைகளையும், சவால்களையும் ஒரு நீண்ட அத்தியாயத்தில் அன்ரன் பாலசிங்கம் விபரித்துக் கூறியுள்ளார்.

இந்திய மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த திம்புப் பேச்சுக்கள், பெங்களூர் பேச்சுக்கள் ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் பங்குபற்றியும், 1987 ஆம் ஆண்டு ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் இப்பகுதியில் ஆழமாக ஆராயப்படுகிறது. இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த பேச்சுக்கள் தொடங்கி, நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற சமீபத்திய பேச்சுவார்த்தைகள் வரை விடுதலைப் புலிகள் கலந்து கொண்ட சகல சமரச முயற்சிகளும் இந்த நூலில் தரப்பட்டுள்ளன.

நோர்வே அரசின் அனுசரணையுடன் பல உலக நாடுகளின் தலைநகரில் நடைபெற்ற ஆறுகட்ட சுற்றுப் பேச்சுக்களின் விபரங்களையும்,




அவற்றின் குறை, நிறைகளையும் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்த நூலில் விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ, அரசியல் போராட்ட வரலாற்றை தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் அடித்தளமாக சித்தரித்து, எழுதப்பட்டுள்ள இந்தப் புதுமையான வரலாற்று ஆய்வு நூலில் இதுவரை வெளிவராத முக்கிய தகவல்களும், கருத்துருவாக்கங்களும் அடங்கியுள்ளன.

# சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிந்தது

# இந்தியாவின் வாய்ப்பை மழை பறித்தது!



இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று கடும் மழை பெய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்றது. அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 235 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. லாங்கர் 71 ஓட்டங்களும், ஹைடன் 58 ஓட்டங்களும் எடுத்தனர். கும்ளே 7 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். ஷேவாக் (155), கைவ் (64), பட்டேல் (54) ஆகியோரது ஆட்டத்தால் இந்தியா முதல் இனிங்சில் 376 ஓட்டங்கள் குவித்தது. வோர்ன் 6 விக்கெட் கைப்பற்றினார்.

141 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இனிங்ஸை ஆடிய அவுஸ்ரேலியா அந்த இனிங்ஸில் 369 ஓட்டங்கள் எடுத்தது. மார்ட்டின் 104 ஓட்டங்களும் கில்கிறிஸ்ட் 49 ஓட்டங்களும் எடுத்தனர். கும்ளே 6 விக்கெட் எடுத்தார்.

இந்தியாவுக்கு 229 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 2 ஆவது இனிங்ஸை ஆடிய இந்தியா நேற்றுமுன்தினம் 4 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷேவாக் 12 ஓட்டங்களுடனும், யுவராஜ்சிங் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று கடைசிநாள் ஆட்டம் நடைபெறுவதாக இருந்தது. சென்னையில் நேற்றுக் காலை முதல் மழை பெய்து கொண்டிருந்தது. இதனால் போட்டி திட்டமிட்டபடி காலை 9.30 மணிக்குத் தொடங்கவில்லை.

மழையையொட்டி சேப்பாக்கம் மைதானத்தின் 80 சதவீத பகுதி தார்ப்பாயால் மூடப்பட்டது. மழை தூறிக்கொண்டிருந்த போதும் தார்ப்பாய் மீது இருந்த தண்ணீரை ஊழியர்கள் அப்புறப்படுத்தினர். தொடர்ந்து மழை



பெய்து வருவதால், கடைசி நாள் ஆட்டம் நடைபெற வாய்ப்பு இல்லாததால் போட்டி சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டி மூலம் அவுஸ்ரேலியா 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை நாக்பூரில் நடைபெறவுள்ளது.

## இலங்கையுடனான டெஸ்ட் பாகிஸ்தான் அணி அறிவிப்பு!

(லாகூர்)

இலங்கையுடனான டெஸ்ட் போட்டிக்கு பாகிஸ்தான் அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி - பாகிஸ்தானுடன் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளது. இந்த மோதல்களுக்கான பாகிஸ்தான் அணியில் புதிதாக 2 வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரியாஷ் அப்ரிடி, ஜூல் கார்நெய்ன் ஹெய்தர் ஆகியோர் வாய்ப்புப்பெற்ற புதிய முகங்கள் ஆவர். மூத்த விக்கெட் காப்பாளர் மொய்ன் கானும் அணியில் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்.

ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம் பிடித்திருந்த அப்ரிடி அணியில் இருந்து நீக்கப்பட்டார். எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இளம் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை கூறியுள்ளது.

## கூடைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

விலகல் முறையில் நடைபெறும் இந்தப் போட்டியில் நேற்று, வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணியை எதிர்த்து கோப்பாய் 'ஏ' அணி மோதியது.

இன்று மாலை 5-00 மணிக்கு யாழ். பற்றீசியன் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

## பாடசாலை கிரிக்கெட் போட்டி வயதுப் பிரிவுகளில் மாற்றம்

(யாழ்பபாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் - அடுத்த ஆண்டு முதல் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளின் வயதுப் பிரிவுகளில் மாற்றங்களைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் இந்த வருடம் 12 வயதுப் பிரிவு, 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு என்ற வகையில் - அஸ்ரா கிண்ணத்துக்காக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் அடுத்த ஆண்டு முதல் 13 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு என்ற வகையில் நடத்தப்படவுள்ளதாக இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் தனது அங்கத்துவப் பாடசாலைகள் அனைத்துக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் 13 வயதுப் பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள்- 1992 செப்ரெம்பர் முதலாம் திகதிக்குப் பின் பிறந்தவர்களாகவும், 15 வயதுப் பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள் - 1990 மே மாதம் முதலாம் திகதிக்குப் பின் பிறந்தவர்களாகவும், 17 வயதுப் பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள் - 1988 மே மாதம் முதலாம் திகதிக்குப் பின் பிறந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனத் தனது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்க அஸ்ரா கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றி வரும் யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கமும் இத்தகைய வயதுப் பிரிவு மாற்றங்களை அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு கொண்டுவரவுள்ளது. (58)

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட் ஆட்டங்கள் மழையால் பாதிப்பு

அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் 12 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி தொடரின் யாழ். மாவட்ட அணிகளின் போட்டிகள் மழை காரணமாக பாதிப்படைந்து வருகின்றன.

இந்தப் போட்டித் தொடர் மழை காரணமாக குறிப்பிட்ட கால அட்டவணையில் நடாத்தி முடிப்பதில், யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த வருடமும் மழை காரணமாக இந்தச் சுற்றுப் போட்டியை நடத்தி முடிக்க முடியாமற் போனமையால், யாழ். மாவட்ட முதன்மை அணிகள் - தென்னிலங்கைப் பாடசாலை அணிகளுடனான அடுத்த சுற்று ஆட்டங்களில் பங்குபற்றக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் - கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் - யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியும் மழை காரணமாக முடிவைத் தீர்மானிக்க முடியாமல் கைவிடப்பட்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி- 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சென். பற்றிக்ஸ் வீரர் சஞ்சீவராஜ் 9 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் ஜபசன் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி - 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் பங்குஜன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் சஜித் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி, 4.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தபொழுது மழை பெய்ய ஆரம்பித்தமையால் போட்டி மாலை 2.15 மணிக்கு இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (58)

## நியூஸிலாந்துடனான டெஸ்ட் பங்களாதேஷ் அணி அறிவிப்பு



(டாக்கா)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளுக்கான 14 பேர் கொண்ட வீரர்களின் பட்டியலை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதில் மூன்று வீரர்கள் மீளவும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கடந்த செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி சம்பியன்ஸ் போட்டித் தொடரில் இருந்து கபால், ஹனான் சர்கார், அலம்கிர் கபீர் ஆகியோர் இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீளவும் அணியில் இடம்பெற்றுள்ளார்கள். துடுப்பாட்ட வீரர் நபீஸ் இக்பாலும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளார். விரலில் காயமடைந்திருந்த அணித்தலைவர் ஹபிபுல் பஸார் சுகமடைந்து மீளவும் அணியில் இடம் பெற்றுள்ளார்.

# விளையாட்டு

## சொகைப் மலிக்கின் பந்துவீச்சு மீண்டும் சர்ச்சை கிளப்புகிறது!



பாகிஸ்தான் அணியின் இளம் வீரர் சொகைப மலிக்கின் பந்து வீச்சு முறை குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாக்ரெல் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் சொகைப் மலிக்கின் பந்து வீச்சுக் குறித்து நடுவர்கள் சைமன் ரபேல், அலீம் டர் ஆகியோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

22 வயதான சொகைப் மலிக்கின் பந்து வீச்சுக் குறித்து ஏற்கனவே ஒரு முறை சர்ச்சை எழுந்ததைத் தொடர்ந்து அவர் பந்து வீச்சு முறையை மாற்றியிருந்தார். எனினும் மீண்டும் அவரது பந்து வீச்சு சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது.

இவரைத் தொடர்ந்து விளையாட அனுமதித்துள்ள ஐ.சி.சி, தொடர்ந்து வரும் போட்டிகளில் இவரது பந்து வீச்சுமுறை குறித்து அவதானிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

லாகூரில் நடந்த பாக்ரெல் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்வி கண்ட போதும் 7 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி 260 ஓட்டங்களையும் பெற்றதால் மாலிக்கே தொடர் நாயகனாகத் தெரிவாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிம்பாப்வேயில் இனவாதம் இல்லை என்ற ஐ.சி.சியின் கருத்துக்கு ஒலங்கா அதிருப்தி தெரிவிப்பு



(சிம்பாப்வே)

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இனவாதம் இருப்பதாகத் தெரியவில்லையென ஐ.சி.சி. தெரிவித்த கருத்துத் தொடர்பாக சிம்பாப்வேயின் முன்னாள் வீரரான ஹென்றி ஒலங்கா அதிருப்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

ஐ.சி.சி. இது குறித்து நடத்திய விசாரணைகள் தொடர்பாகவும், அதில் ஏற்பட்ட முடிவுகள் தொடர்பாகவும் இன்னமும் விடை காணப்படவேண்டியுள்ளது.

அத்துடன் சிம்பாப்வேயிற்குச் செல்லவுள்ள இங்கிலாந்து அணியில் பந்துவீச்சாளர் ஸ்ரீபன் ஹர்மிசன் செல்லாததையிட்டு நான் அவரைப் பாராட்டுகின்றேன்.

இவர் தனது விஜயத்தை மேற்கொள்ளாமல் விடுவதனால், இரண்டு நாட்டுக் கிரிக்கெட் சபைகளுக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இனவாதம் இல்லையென ஐ.சி.சி. தெரிவித்துள்ள நிலையில் - அந்த அணியில் இனவாதம் இருப்பதாக நிரூபிக்கப்பட்டாலோ, அல்லது சிம்பாப்வே அணியில் இருந்து வெளியேறிய ஹீத்ஸ்ரிக் தலைமையிலான வீரர்கள் இனவாதத்தால்தான் வெளியேற்றப்பட்டார்கள் என உறுதிப்படுத்தப்பட்டாலோ, ஐ.சி.சி. பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

### புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில்

# 2 ஆயிரத்துக்கும் அதிகமான சமூக சீரழிவு சி.டிக்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சீரழிவுக் காட்சிகள் அடங்கிய சி.டிக்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டதாக, தமிழீழ திரைப்படப் பொறுப்பாளர் ராதா தெரிவித்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர்- தென்பகுதியிலிருந்து குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்ட சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட சி.டிக்கள் அழிக்கப்பட்டன.

அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வீடியோக்கடை உரிமையாளர்கள், மற்றும் திரையரங்கு உரிமையாளர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

24 மணிநேர தொலைக்காட்சி ஒலிபரப்புகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் குடாநாட்டு மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சி அடைந்து செல்வதுடன், சமூச் சீரழிவுச் செயற்பாடுகளுக்கும் இளம் சமூகத்தினரை இட்டுச் செல்கிறது.

ஆகவே இவ்வாறான ஒரு நிலைக்குள் இருந்து எமது இளம் சமூகத்தினரை நாம் காப்பாற்ற வேண்டும்.

இதுவிடயத்தில் பெற்றோரும் விழிப்புடன் இருக்கவேண்டும். அத்துடன் எமது பண்பாட்டையும், எதிகால சமுதாயத்தையும் பாதுகாப்பதில் நாம் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்குத் திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் வீடியோ கடை உரிமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தொடர்ந்து வடமராட்சி திரைப்படச் சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

தலைவராக செல்வபாலனும், செயலாளராக சந்திரமோகனும், உறுப்பினர்களாக கிருபாகரன், சஞ்சவன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (12)

## திருமந்திர மாநாடு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் திருமந்திர மாநாடு - எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு, இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்புச் சொற்பொழிவுகள் பண்ணிசை, கதாப்பிரசங்கம், வில்லிசை மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மாலை 3 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோயிலிலிருந்து திருமூலரின் திருவுருவப்படம் - அடியார்களின் திருமுறைப் பாடல்கள் ஒலிக்க, ஊர்வலமாக இணுவில் மஞ்சத்தடி ஆலயத்துக்கு எடுத்துவரப் படும்.

## இலவச கண் பரிசோதனை முகாம்

வல்வெட்டித்துறை வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினர் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வட்வெட்டித்துறை வைத்திய சாலை கிளினிக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சங்க எல்லைக்குட்பட்ட வறிய மக்களுக்காக நடத்தப்படவுள்ள இந்த மருத்துவ முகாமில் - 40 வயதுக்குட்பட்ட 200 பேருக்கு மட்டும் கண் பரிசோதிக்கப்படும்.

முன்கூட்டியே உங்கள் பெயர்களை வைத்தியசாலையில் பதிவு செய்துகொள்ளவும்.

## காணாமல் போனோரின் வழக்கு டிசம்பர் மாதத்துக்கு ஒத்திவைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போன 19 பேரின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகளை - எதிர்வரும் டிசம்பர் மாதம் 8,9,10 ஆம் திகதிகளுக்கு சாவகச்சேரி நிதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் வியாழக்கிழமை காணாமற்போன 19 பேரினது மனு மீதான விசாரணை - விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ரெமீடியஸ் ஆகியோரும் - எதிர் மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி சுமுது விக்ரம ஆராச்சியும் ஆஜராகியிருந்தனர். (29)

## தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாற வேண்டாமென வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்தில் தாராளமாக உள்ளன.

எனவே, தரகர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறவேண்டாம் என, மேலதிக மாவட்டப் பதிவாளர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிறப்பு, இறப்பு படிவங்கள் யாழ். செயலகத்தில் இல்லை என்று காரணம் காட்டி, தரகர்கள் பொது மக்களிடம் படிவங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களுடைய இந்த நடவடிக்கைகளால் தமது தேவைகளை நிறைவேறறவரும் மக்கள் - பல்வேறு அசெளகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைத் தடுக்குமுகமாக தேவையானளவு விண்ணப்பப் படிவங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

தமது தேவைகளை நிறைவேற்ற வரும் மக்கள் - தரகர்களின் உதவியை நாடாது, அலுவலகத்துக்கு நேரடியாக வந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

## மோட்டார் சைக்கிள் மோதி இளைஞன் காயம்

மாலுசந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் நேர்எதிராக மோதி - விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தண்டாயுதபாணி தேசிகர் பார்த்தீபன் (வயது 20) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (14)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : சு.பிரதிக்ஷன்
முகவரி : குமாரியோடை, கரணவாய்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : ஆர்.ரஜீபா
முகவரி : வவுலாவத்தை.

### நான்காவது அகவையில்



பெயர் : யோ.கிருஷாளினி
முகவரி : கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றோர் ஒப்பம்

# வலி.மேற்கு இளைஞர், யுவதிகளுக்கு நடமாடும் மட்கலத் தொழிற் பயிற்சி

(வலிகாமம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில், பண்ணாகம் மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இன்று நடமாடும் மட்கல பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி - தொழிற்துறைத் திணைக்கள வடக்கு - கிழக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது.

கிராமப்புறங்களில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் ஆண், பெண் இருபாலாருக்கும் தொழிற்திறன் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக- மட்கல, கைத்தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதன்மூலம் வேலையற்றிருக்கும் ஆண், பெண் இருபாலாரும் சுயதொழில் வாய்ப்பைப் பெறுவதோடு, வருமானத்தை ஈட்டவும், பெற்றுக்கொள்ளும் பயிற்சியை ஏனையவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் இந்த நடவடிக்கை கைகொடுத்துதவும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பண்ணாகம் மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம் பெறும் இந்தப் பயிற்சிநெறியில், 10 பெண் பயனாளிகள் பங்கு கொள்ள உள்ளனர்.

இந்தப் பயிற்சிக்கு வேண்டிய மூலப்பொருள் உபகரணங்கள் மற்றும் ஏனைய செலவுகள் யாவற்றையும் தொழிற்துறைத் திணைக்களமே மேற்கொள்கிறது.

மாவட்ட முகாமைத்துவ உதவியாளரால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்தப் பயிற்சிநெறியை - சங்கானை அரச மட்கல தொழிற்துறைப் போதனாசிரியர் அ.திருச்செல்வம் செய்முறைப் பயிற்சியைப் பயனாளிகளுக்கு வழங்கவுள்ளார். (48)

## நெடுந்தீவில் உணவகம் திறந்துவைப்பு

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தால் கடந்தவாரம் நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் உணவகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு - திடீரெனவும், சுற்றுலா நோக்காகவும் வந்து செல்வோர், இதுவரை காலமும் சீராக இயங்கும் உணவகங்கள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது கூட்டுறவு அமைப்பால் உணவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், நெடுந்தீவுக்கு சுற்றுலா நோக்கமாக வருவோருக்கான உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## நிர்வாகிகள் தெரிவு

வலி.கிழக்கு பிரதேசசபையின் ஊழியர் நலன்புரிச் சங்க நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு - நீர்வேலி மாதர்சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சங்கத்தின் தலைவராக த.ஸ்ரீவரதராஜனும், செயலாளராக தி.பாஸ்கரமகாராஜாவும், பொருளாளராக இ.ஜெயகாந்தனும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (80)

## நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டம்

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் மாதாந்த பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் - எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11.30 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எம்.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நெடுந்தீவு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, மின்சாரம், மீன்பிடி, கமத்தொழில் மற்றும் நெடுந்தீவில் முன்னெடுக்கப்படவேண்டிய பல விடயங்கள் தொடர்பாகவ்ும் ஆராயப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## அபிவிருத்திக்குழுக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாதாந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் - நாளை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில்- திணைக்கள அதிகாரிகள், கிராம சேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## மருத்துவபீடத்தினர் நடத்திய மாபெரும் மருத்துவ முகாம்

(தீவகம்)

தீவக லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட, சமுதாய மருத்துவத்துறை மாணவர்களால் நேற்றுமுன்தினம் எழுவைதீவில் மாபெரும் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

முருகவேள் வித்தியாலயத்தில் நடைபெற்ற மருத்துவமுகாம் வித்தியாலய அதிபர் எஸ்.சிவபாலன் தலைமையிலும், அரசினர் றோ.க. வித்தியாலயத்தில் நடைபெற்ற மருத்துவ முகாம் - தீவக லயன்ஸ் கழகத் தலைவர் பொ.அருணகிரிநாதர் தலைமையிலும் இடம்பெற்றன.

இரு இடங்களிலும் இடம்பெற்ற மருத்துவமுகாமில் - 117 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு, கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன், நீரிழிவு, குருதியமுக்கம், தோல் வியாதிகள், பல் வியாதி ஆகிய நோய்களுக்குட்பட்ட 273 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அத்துடன் பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோருக்கான மருத்துவ ஆலோசனைகளும், சிறுவர் சுகாதார நடைமுறைகள் என்பன தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டது.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமான மருத்துவ முகாம் நிகழ்வு- மாலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது.

இந்த இலவச மருத்துவமுகாம் சேவையால் எழுவைத்தீவைச் சேர்ந்த சகல குடும்பங்களும் பயனடைந்துள்ளனர்.

சுகாதார வசதிகளற்ற நிலையில் வாழ்ந்த மக்களுக்கு இவ்வாறானதொரு மருத்துவ முகாம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)




உடுவிலில் உள்ள ஆர்க் சிறுவர் பாடசாலைக்கு மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தால் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களும் வழங்கப்பட்டது. இதனை கழக உறுப்பினர் துரைரட்ணம் அருட்சகோதரி வசந்தியிடம் கையளிக்கிறார்.




# அமெரிக்காவில் வெடிக்கும் எரிமலை

மவுஸ்ன்ட் சென் கெலன்ஸ் என்று அழைக்கப்படுகின்ற எரிமலை ஒன்று அமெரிக்க நாட்டின் வொஷிங்ரன் தலை நகரத்துக்கு அருகில் காணப்படுகிறது. இது கடந்த மாதம் வெடித்துச் சிதறியிருக்கிறது. கிட்டத்தட்ட இதனுடைய புகை நகரத்துக்கு அண்மையில் வந்ததாகவும் கூறப்படுகிறது. இது முகில் போல ஏறத்தாழ 3600 மீற்றர் தூரம் வரை எழுந்து பரவியது. இது அமெரிக்காவின் வரலாற்றிலேயே முதற்தடவையாக ஏற்பட்ட சம்பவமாகும்.

இதன் காரணமாக வானிலை மாற்றங்களும் ஏற்படக்கூடும் என்ற அச்சமும் அங்கே நிலவுகின்றது. அப்போது ஆஸ்துமா நோயாளிகள் முகத்துக்கு மாஸ்க் அணிந்துகொண்டு திரிந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.



1980 ஆம் ஆண்டு இப்படியான அனர்த்தம் ஏற்பட்டது. அப்போது ஏறக்குறைய 57 பொதுமக்கள் இதனால் இறந்திருந்தார்கள். உண்மையில் இத்தகைய அனர்த்தங்கள் நகரங்களுக்கென்றே இடம்பெறுவது பெரிதாக வரவேற்கத்தக்கதல்ல என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

எரிமலைக் குழம்புகள் ஏறக்குறைய 300 மீற்றர் தூரம்வரை முதலில் பாய்ந்ததாகவும், பின்பு அவை ஆவியாகத் தொடங்கியதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இயற்கை அனர்த்தங்களால் பெரிதாகப் பாதிக்கப்பட்டிராத அமெரிக்க வல்லரசு இது ஒரு எச்சரிக்கையாக இருக்குமெனக் கருதுகிறது.

# பாதுகாப்பு அமையங்கள்

கடல்வாழ் உயிரினங்களின் சட்டபூர்வமற்ற ஏற்றுமதியை பாங்கொக் அரசு தடைசெய்திருக்கின்றது. இலத்திரனியல் துறையில் முதலிடம் வகிக்கும் ஜப்பான் இப்போது கடல்வாழ் உயிரினங்களை ஏற்றுமதி செய்வதிலும், தனக்கு என்று ஒரு இடத்தைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகளை முடுக்கிவிடத் தொடங்கியிருக்கிறது. மிகப் பெரிய வெள்ளைச் சுறாக்கள் ஜப்பான் நாட்டின் கடற்கரையோரங்களில் காணப்படுகின்றன. இவை மிகவும் பெறுமதி கூடியவை. ஆனாலும் இவற்றைப் பிடிப்பதற்குத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.



166 உறுப்பு நாடுகள் கடல்வாழ் உயிரினங்களுக்கான பாதுகாப்பு அமையத்தில் இணைந்திருக்கின்றன. இவை இப்படியிருக்க யானைகளும் தொடர்ச்சியாகச் சட்டபூர்வமற்ற முறையில் வேட்டையாடப்படுவதைத் தடுப்பதற்காக நமீபியா நாட்டைத் தலைமையாகக் கொண்டு ஒரு அமையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தென்னாபிரிக்காவிலேயே யானைகள் அதிகம் வேட்டையாடப்படுவதாகவும், கடத்தப்படுவதாகவும் ஒரு நிலை இருக்கின்றது.

இந்த அமையத்தின் உறுப்பு நாடுகள் அண்மையில் நெதர்லாந்தில் கூடி, இந்தப் பிரச்சினைபற்றி ஆராய்ந்திருக்கின்றன. இது போலதான் கறுப்பு நிறக் காண்டா மிருகங்கள் அழிவதைத் தடுப்பதற்காகவும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இருக்கின்றன. நமீபியா நாட்டின் பொட்ஸ்வானா என்ற பிரதேசம்தான் உலகிலேயே முதற்தர யானைத் தந்தம் ஏற்றுமதி செய்யும் பிரதேசமாக இருக்கின்றது.

# வளரும் சொனி எரிக்சன்



சொனி எரிக்சன் கையடக்கத் தொலைபேசி நிறுவனம் ஜப்பான் மற்றும் சுவிஸ் கூட்டுத் தயாரிப்பு ஆகும். தற்போது இந்தக் கம்பனி நொக்கியா கையடக்கத் தொலைபேசிக்கு நிகராகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போன்களால் 93.4 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் வரை உழைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போன்களின் வெளி அமைப்பு நொக்கியா போன்றே காணப்படுகிறது. அத்துடன் போன் கமராவில் பெறப்படும் படங்கள்கூடத் துல்லியமானதாக இருக்கின்றன.

கீபோட்களின் பழைய அமைப்பு மாற்றப்பட்டு, நொக்கியாவைக் கொப்பியடிக்கும் நிலை சொனி எரிக்சன் நிறுவனத்துக்கு வந்திருக்கிறது. இந்தக் கூட்டுக் கம்பனி 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் தோன்றி இருக்கிறது.

2005 ஆம் ஆண்டளவில் 10 வீதம் அல்லது 20 வீதமளவில் விற்பனை அதிகரிப்பு இந்தப் போன்களில் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தற்போதைய சந்தை நிலைவரப்படி நொக்கியா 29.7 வீதம், மோட்டோரோலா 15.8 வீதம், சாம்சங் 12.1 வீதம், சீமென்ஸ் 6.1 வீதம், சொனி எரிக்சன் 6.6 வீதம், எஸ்.ஜி 6 வீதமாக 2004 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டு விற்பனைச் சதவீதங்களாகும். இவற்றையெல்லாம் சற்று முந்திக்கொண்டு, 5 ஆவது இடத்திலிருந்த சொனி எரிக்சன் 3 ஆவது இடத்துக்குச் சென்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பழங்குடி மக்கள்



ஏறக்குறைய 100 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட உயிரினங்களுடைய தோற்றம் மற்றும் அவற்றின் வாழ்வு முறைகள் ஆகியன பற்றி ஆராய்ச்சி செய்த பொழுது, பல ஆச்சரியமான முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆபிரிக்க நாட்டிலேயே பெருமளவு படிவுகள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்போது காணப்பட்ட பெருமளவு விலங்குகள் இப்போது காணப்படுவதில்லை.



ஹோமோ செப்பியன் மனிதர்களின் தோற்றம் பற்றியும் ஆராயப்பட்டிருக்கிறது. இப்படியான மனிதர் நாகரிகத் தோற்றுவாய்களை ஆராய்ந்து நோக்கும் பொழுது, முதன் முதலில் நன்கு நாகரிகம் கொண்ட மனிதர்கள் சைபிரியா மற்றும் அலஸ்க்கா ஆகிய நாடுகளிலேயே தோன்றினார்கள் என்ற கருத்து நிலவுகிறது. அவர்கள் பாவித்த பலதரப்பட்ட பொருட்களை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, அவை இப்போதுள்ள பொருட்களைப் போன்றே இருக்கின்றது. ஆனால், அவற்றில் ஒரு உறுதியான தன்மை காணப்படுகிறது. பழைய காலத்து மக்கள் பாவித்த ஒரு சீப்பு – அதாவது எத்தனையோ ஆண்டுகளுக்கு முற்பட்டது கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது யானைத் தந்தம் அல்லது மரத்தால் செய்யப்பட்டதாக இருக்கிறது. தற்போது உலகளாவிய ரீதியில் இரண்டு வகையான மக்கள் காணப்படுகிறார்கள்.

ஒருவகை உலகளாவியரீதியில் பரந்து வாழ்கின்ற மக்கள், மற்றையவர்கள் ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது பிரதேசத்தில் மட்டும் வாழுகின்ற மக்கள் இனங்கள். ஆபிரிக்காவிலும், கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலும் இப்போதும் பழங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள்.

# மினி செய்மதிகள்

50 மினி செய்மதிகள் அனுப்பப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1957 ஆம் ஆண்டு முதன்முதலில் சோவியத் நாடு ஸ்புட்னி 1 என்ற செயற்கைக் கோளை விண்வெளிக்கனுப்பியது. இது அனுப்பப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு, 2007 ஆம் ஆண்டில் பெருமளவான கொண்டாட்டங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளை சோவியத் நாட்டு விண்வெளி ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது. முதன்முதல் வெளியிட்ட ஸ்புட்னி கூடைப் பந்து வடிவத்தில் அமைந்துள்ளது.



அந்தச் செயற்கைக் கோள் ஏறத்தாழ 83 கிலோகிராம் நிறையுடைய மினி செய்மதிகள் 10 கிலோகிராம் நிறையுடையவை. இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட மிகச் சிறிய செய்மதியாக 6.5 கிலோகிராம் நிறையுடைய ஜி.பி.எஸ் கருதப்படுகிறது. இது கமெரா தொழில்நுட்பம், கணினி மற்றும் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ளது. எஸ்.என்.ஏ.பி என்ற இந்த வகையான செய்மதிகள் 2000 ஆம் ஆண்டளவில் விண்வெளியில் கால் பதித்தன. தற்போது தொலைத்தொடர்புத் துறையில் ஏவப்பட்டிருக்கின்ற செய்மதிகளும் மிக மிகச் சிறியனவாகவே உள்ளன. ஸ்புட்னிக் – 2 விண்கலத்திலேயே லைகா என்ற நாய் பயணம் செய்து முதன் முதலில் தன்னுடைய காலை விண்வெளியில் பதித்தமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரத்துக்கான தேர்தல்

அமெரிக்கத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்ற அதிபர் புஷ் மற்றும் ஜோன்கெரி ஆகிய இருவரும் அமெரிக்காவின் சுகாதாரத்துறையை வளம்படுத்தப் போவதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் தலைநகரமாக இருக்கின்ற வொஷிங்டன் நகரத்தின் மேற்குப்பக்கத்தில் இப்போதும் சுகாதாரச் சீர்கேடுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஏறத்தாழ 45 மில்லியன் அமெரிக்க மக்கள் சுகாதாரக் காப்புறுதியில்லாமல் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். தேர்தல் களத்தில் நிற்கின்ற இருவரும் தாம் ஆட்சிக்கு வந்தால், இலவச உணவு உடைகள் மற்றும் சுகாதாரக்கவனிப்பு ஆகியவற்றை வழங்கப் போவதாகக் கூறுகிறார்கள்.



புஷ் ஒருபடி மேலே போய், தான் இலவச சுகாதாரக் காப்புறுதியை வழங்கப்போவதாக அறிக்கை விட்டிருக்கின்றார். இலவசமான சுகாதாரம் என் தொனி அமெரிக்க அதிபர் தேர்தலில் எடுபட்டு வாக்காளர்களைக் கவரும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். அமெரிக்காவின் பின்தங்கிய மாநிலங்கள் சிலவற்றில் சுகாதாரச் சீர்கேடுகளைப் பற்றி இதுவரை காலமும் வந்த அரசாங்கங்கள் கவனிக்கவில்லை என்ற குறை மக்களிடையே இருக்கிறது. அவர்கள் பகட்டு வார்த்தைகளுக்கு மயங்குகின்ற அளவுக்கு இல்லை. இம்முறை வாக்கு சுகாதாரத்துக்குத் தான்.

பொது சன நூலகம்

## திரை விமர்சனம்

# எம்.குமரன் சன் ஒப் மகாலட்சுமி

ஜெயம் படத்தின் அதே கூட்டணி வெளியீடு தான் இது. அதுபோலவே ஒரு தெலுங்குப் படத்தின் ரீமேக் தான். கதாநாயகன் ரவிக்கு இது இரண்டாவது படம்.



நதியா தனது சிறிய மகனுடன் மனோபாலாவின் வீட்டுக்கு வந்து குடியேறினார். மகன் ரவி பெரியவனாகி தந்தைமீது வெறுப்புக் கொள்கின்றான். தாயைத் தவிக்க விட்ட காரணத்தால் ரயில் நிலையத்தில் நண்பன் ஒருவனின் மகளை அழைத்துச் செல்லும் ரவி தவறுதலாக அசினைக் கட்டாயப்படுத்தி அழைத்து வரு கின்றார். முதலில் மோதி, பின்பு இருவரும் காதலிக்கிறார்கள். இதற்கிடையில் நதியா இறக்கிறார். இறக்கும்போது தந்தை பிரகாஷ் ராஜ் என்பதை மகனிடம் கூறிவிட்டு தந்தையுடன் இணையுமாறு வலியுறுத்துகிறார். ரவி எப்படி இணைந்தார் என்பது மீதிக் கதை.



நதியா தாய்ப் பாத்திரத்தை ஓரளவு கஷ் டப்பட்டுச் செய்திருக்கிறார். ரவியின் நடிப்பில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. மலையாள இறக்குமதி அசின் நடிக்கவே இல்லை. அப்படி இப்படி வந்து போகின்றார். விவேக் கின் நகைச்சுவை கொஞ்சம்கூடுதல். பிரகாஷ்ராஜ் நதியா உறவு பற்றி ஒரு கதையுமில்லை. இது இயக்குநர் ராஜாவுக்கு ஒரு தொய்வு. வசனம் பிரசன்னகுமார் பிரமாதம். இசையமைப்பாளர் சிறிகாந் தேவாவின் இசையில் பாடல்கள் பரவாயில்லை. சண்டைப்பயிற்சி கலைக்கண்ணன் – தூள்தான். பாலசுப்பிரமணியத்தின் கமெரா புகுந்து விளையாடியிருக்கிறது. ஜெயம் ரவிக்கு வெற்றிக்கொடி தான்.

– சுதர்சன் –

# கையடக்கத் தொலைபேசியால் வரும் தொல்லை



மொபைல் தொலைபேசிகளால் காதிலே ரியுமர் நோய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என சுவிடன் நாட்டு ஆய்வாளர்கள் குழாம் தெரிவித்திருக்கின்றது. ஏறக்குறைய 750 மொபைல் பாவனையாளர்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டு ஆராயப்பட்டிருக்கின்றார்கள். நீரோமா என்கின்ற ரியுமர் நோய் நரம்பினூடாக இறுதியில் மூளையைத் தாக்குகிறது. இது மிகவும் அரிதான நோய் எனவும், 100 ஆயிரம் பேரில் ஒருவருக்குத்தான் இந்த நோய் வரக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியாகப் பத்து வருடங்கள் கையடக்கத் தொலைபேசி பாவிப்பவர்களுக்கு இந்த நோய்க்கான ஆரம்பக் கட்டங்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. தற்போது வருகின்ற நவீன மொபைல் போன்கள் காதிலே வைக்காமல் வயர்லஸ் போன்று பேசக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டளவில் சந்தைக்கு வந்த டிஜிற்றல் ஜீ.எஸ்.எம் போன்கள் கதிர்வீச்சுக் கூடியவையாகக் காணப்படுகின்றன. ஐரோப்பாவின் சனத்தொகையில் 1/4 பங்கினர் மொபைல் போனுடன் காணப்படுகின்றார்கள். 2002 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு கதிர்வீச்சுப் பாதுகாப்பு எச்சரிக்கையை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் செய்தன. ஆனாலும் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை ஐரோப்பாவில்தான் மிக அதிகம் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

# எச்.ஐ.வி.மருந்து புதிய திருப்பம்



எச்.ஐ.வி நோய்க்கான தடுப்பு மருந்து தயாரிப்பதில் பலதரப்பட்ட நாடுகள் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றில் அமெரிக்க மற்றும் சுவிஸ் நாட்டுக் கூட்டணி, மனிதக் குரங்குகளில் பலதரப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஒருவகையான கலக்கட்டமைப்பு சிசிஆர் 5 என்பது எச்.ஐ.வியைக் கட்டுப்படுத்தக்கூடியது என மருத்துவவியலாளர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். உடலிலே இக்கலத்தின் தோற்றத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம், எச்.ஐ.வி கிருமிகள் தொற்றுதலையும், பரவுதலையும் தடுக்க முடியும் எனவும் நம்பப்படுகிறது. குரங்குகளில் இந்தப் பரிசோதனையைச் செய்த போது, சில குரங்குகளில் இந்த முயற்சி வெற்றியளிக்காததால் விஞ்ஞானிகள் மிகவும் கவலை அடைந்திருக்கிறார்கள்.

ரன்திஸ் என்ற ஒரு வகையான புரத மருந்தும் குரங்குகளின் எச்.ஐ.வி நோயைத் தடுக்கக் கூடியவாறுள்ளதாக மருத்துவவியலாளர்கள் கருது கின்றார்கள். இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடும் அணியில் மேலும் சில அரிய கண்டுபிடிப்புகள் சேரும் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. உலகில் தற்போது எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. அத்துடன், மில்லியன் கணக்கில் எச்.ஐ.வி பொசிடிவ் மக்கள் காணப்படுகிறார்கள். இந்த அணியின் கண்டுபிடிப்புகள் பல வெகு விரைவில் வொஷிங்ரனில் வைத்து அறிவிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

# புதிய கருவி

கையடக்கத் தொலைபேசிகளில் வருகின்ற சமிக்ஞைகள் மிகவும் கதிரியக்கம் கூடியவை என்பது யாவரும் அறிந்ததே. அதனால்தான் பெற்றோல் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக கையடக்கத் தொலைபேசிகளைப் பாவித்தல் மிகவும் ஆபத்தானது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தற்போது இந்தக் கையடக்கத் தொலைபேசிகளால் சினிமாத் தியேட்டர் தற்போது புதியவகையான சிக்கல்களை எதிர்நோக்கி இருக்கின்றன. அங்கே கையடக்கத் தொலைபேசிகளைப் பார்வையாளர்கள் பாவிப்பதால், படம் குழப்பமடைகின்றது. இதற்குக் காரணம் இரண்டு சமிக்ஞைகளும் ஒரே அலைவரிசைகளைக் கொண்டிருக்கும் பொழுது குழப்பமடைகிறது. இந்தச் சிக்கல்களைத் தடுப்பதற்கு ஒரு வகையான கருவி எல்லாத் தியேட்டர்களிலும் பொருத்தப்பட்டிருக்கிறது. ஜமீர் எனப்படும் இந்த வகைக் கருவி தியேட்டருக்குள் வருகின்ற பார்வையாளர்களின் கையடக்கத் தொலைபேசி சமிக்ஞைகளைக் கட்டுப்படுத்தக்கூடியது. இது ஏறக்குறைய 105 ஸ்ரேலிங் பவுண்களிலிருந்து கிடைக்கக்கூடியததாகக் காணப்படுகின்றது. தியேட்டர்களுக்குள் கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு செல்லும்பொழுது, நோ சிக்னல் என்ற தகவலே மொபைல் தொலைபேசிகளின் திரையில் விழுகின்றது. ஆகவே, தியேட்டர்களுக்குள் தொலைபேசிகளின் தொல்லையின்றி படத்தைப் பார்க்கக்கூடியவாறு இருக்கிறது என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.



# கண்கவர் அம்பீபியன்கள்



அரிதான தரையில் ஊர்ந்து வாழ்கின்ற பிராணிகள் உலகளாவிய ரீதியில் இறைச்சிக்காக அதிகம் பிடிக்கப்படுவதால், அவற்றின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டளவில் 122 பெறுதற்கரிய இனங்கள் காணப்பட்டன. ஆனால், தற்போது மிகவும் குறைவாகவே இவை இருப்பதாக மிருகங்கள் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஏறக்குறைய 6 ஆயிரம் ஊரும் பிராணிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஏறத்தாழ 500 விஞ்ஞானிகள் வரையில் இந்த மிருகங்களின் அழிவுக்கான காரணம் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரண பல்லிகள், தவளைகள், ஓணான்கள், உடும்புகள் ஆகியன பல நிறங்களையும், பல வடிவங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவற்றின் தோற்றம் மற்றும் அமைப்பு ஆகியன பார்ப்பவர்களை ஆச்சரியப்பட வைக்கிறது. கொலம்பியா, மெக்சிக்கோ, பிரேசில், மற்றும் சீனாஆகிய நாடுகளில் வாழ்கின்ற சில ஊர்வன பயங்கரமானதாக இருக்கின்றன. சில ஊரும் மிருகங்கள் காலநிலைக்கேற்றவாறு வாழக்கூடியதாக உள்ளன. வரட்சியான இடங்களில் உள்ளவை மிகப் பயங்கரமானதாக உள்ளன. இதேவேளை – அமெரிக்கா, கரிபியன் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலும் கண்கவர் அம்பீபியன்கள் இருப்பதாகவும், ஆனால் அவை பங்கசு நோயால் பீடிக்கப்பட்டதாகவும் இருக்கின்றன.

# வைரஸ்களின் பெருக்கம்

பலதரப்பட்ட நோய்களைக் கொண்டு வருகின்ற வைரஸ்கள் தற்போது பெருகிக் காணப்படுகின்றன. இவற்றின் பெருக்கம் கட்டுப்பாடற்ற நோய்கள் பலவற்றைக் கொண்டுவரக்கூடியவாறு இருக்கிறது.



1918 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் ஒரு வகையான வைரஸ் பெருக்கம் ஏற்பட்டது. அதைக் கட்டுப்படுத்துவது அப்போது மிகவும் சிரமமாக இருந்தது. அப்படியான ஒருநிலை தற்போது ஏற்படக்கூடுமோ என, சுகாதார நிபுணர்கள் ஆரூடம் கூறுகின்றார்கள். 1918 ஆம் ஆண்டில் முதல் தடவையாக வைரஸ்கள் பெரிதாகத் தாக்கம் ஏதுமற்றவாறு காணப்பட்டன. ஆனாலும், அப்போது ஸ்பானிஸ் காய்ச்சல் இந்த வகை வைரஸால்தான் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு அப்போது இருந்தது. நடுத்தர வயது மக்கள் இறப்பதற்கும் இந்த வைரஸ் நோய்தான் காரணம் என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கருதிக்கொண்டு இருக்கிறார்கள்.

சில வேளைகளில் – சில வைரஸ்கள் 24 மணி நேரத்துக்குள் மனிதர்களைக் கொல்லக்கூடிய ஆற்றல் கொண்டவையாக இருக்கின்றன. ஆனால், சில கடும் வைரஸ் நோயாளிகள் ஒரு கிழமைவரையும் முற்றான வைத்தியக் கவனிப்பில் இருந்து, குணமாக்கி இருக்கிறார்கள். ஆரம்பத்தில் வைரஸ் நோய்களைப் பரப்பியதில் பன்றிகளுக்கும் முக்கிய பங்கு இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பன்றிகளில் காணக் கூடிய சில கல அமைப்புக்கள் வைரஸ் பெருக்கத்தை உருவாக்குகின்றன.

# முல்லைத்தீவு வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் - எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 117 பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதென, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் 11 பட்டதாரிகளும், கரைதுறைப்பற்று அரச அதிபர் பிரிவில் 47 பட்டதாரிகளும், புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் 44 பட்டதாரிகளும், துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் 5 பட்டதாரிகளும், ஒட்டுசுட்டான் அரச அதிபர் பிரிவில் 10 பட்டதாரிகளுமாக - மொத்தம் 117 பட்டதாரிகள் இரண்டாம் கட்டப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெறவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு கடன் வழங்கல்

கிளிநொச்சி - பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் சிறுபோகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் சிறுபோக விவசாயப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 100 விவசாயிகளுக்கு முதற்கட்டமாகத் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளும், 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது என, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.




## முல்லைத்தீவு மாவட்ட கடற்கரையில் வெளிச்ச வீடு அமைக்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டக் கடற்கரையில் வெளிச்சவீடு அமைத்துத் தருமாறுகோரி, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சமாசத்தால் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்த மாவட்டக் கடற்கரையில் நீண்டகாலமாக வெளிச்சவீடு இல்லாமையால், இரவு வேளையில் கடற்தொழிலுக்குச் செல்வோர் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வெளிச்சவீடு அமைப்பது தொடர்பான பிரச்சினை மிக நீண்டகாலமாக இருந்து வருகிறது.

இதனை நீக்குமுகமாகவே அரச அதிபரிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் -இதற்கான திட்டத்தைத் தயாரித்துத் தருமாறு கடற்தொழிலாளர் சமாசத்தைக் கேட்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாகத் தற்காலிகமாக வெளிச்சவீடு ஒன்றை அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.

## பஸ் தரிப்பிடம் இன்றி மக்கள் பெரும் சிரமம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்களில் பஸ்தரிப்பிடம் இன்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதில் விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, கள்ளியடி, பாலியாறு ஆகிய கிராமங்களே இவ்வாறு பஸ்தரிப்பிடமின்றிக் காணப்படுகிறன.

இந்தப் பகுதி மக்கள் இதுவரை காலமும் மரநிழலில் பஸ்ஸுக்காகக் காத்து நின்றனர்.

தற்போதைய மழைகாரணமாக மர நிழலிலும் நிற்கமுடியாத நிலையில், மழையில் நனைந்தவாறே பிரயாணம் செய்யவேண்டியுள்ளது.

இது தொடர்பாக இதுவரையில் சம்பந்தப்பட்டவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென, அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## கற்றல் உபகரணம் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் - வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

முல்லைத்தீவு குமரபுரத்தைச் சேர்ந்த 15 வறிய மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பரம், வலயப் பொறுப்பாளர் செந்தூரன், பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வறுமையை நிலைப்படுத்தல் இனம் காணலுக்கான புதிய தகவல் திரட்டு தயாரிக்கப்படவுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமையை நிலைப்படுத்தலும், இனம் காணலுக்குமான புதிய தகவல் திரட்டுத் தயாரிப்பதற்கு இலங்கையின் தகவல் வள முகாமை நிலையம் ஈடுபட்டுள்ளது.

இதன் முன்னோடியாகக் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், தகவல் வள முகாமை நிலைப் பணிப்பாளர் ரோகினி சிங்கராசா இந்தத் திட்டம் தொடர்பான விளக்கவுரையை வழங்கினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் இந்த அமைப்பு, கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

கிராம மட்டத்தில் தகவல்களை ஒழுங்குபடுத்தும் முகமாக எதிர்வரும் நவம்பர் மாதம் 12, 13, 14 ஆம் திகதிகளில் பூநகரி, கண்டாவளை, கரைச்சி, பளைப் பிரதேச சபைக்குட்பட்ட கிராம சேவையாளருக்கும் இது தொடர்பான பயிற்சிநெறி ஒன்று நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வட்டக்கச்சி தூயமணி முன்பள்ளியில் ஆசிரியர், மாணவர்கள் கௌரவிப்பு!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி - சில்வாவீதி தூயமணி முன்பள்ளியில், கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் - பெற்றோர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு அகிலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கை வட்டக்கச்சி மாயவனூர் கிராம சேவையாளர்கள் ஜோன் ஜெகநாதன், முன்பள்ளிகளின் மேற்பார்வையாளர் கௌசலா ஆகியோர் ஏற்றிவைக்க, மாவீரர் தூயமணியின் திருவுருவப் படத்துக்கு வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளர் சோழநிலவன் மலர்மாலை அணிவித்தார். தலைமை உரையை அகிலேஸ்வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாயவனூர் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன், பிரதேசப் பொறுப்பாளர் சோழநிலவன், பெற்றோர் தரப்பில் கௌரி சிறப்புரையை நிகழ்த்தினர்.

அடுத்து முன்பள்ளி ஆசிரியர், மாணவர்கள் - மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன், இவர்களுக்குப் பரிசுப் பொருட்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

முன்பள்ளி மாணவன் ஒருவர் ஆசிரியர்களைப் பாராட்டிக் கவிதையை வழங்கினார்.

இறுதியாக நன்றி உரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றது. (9)



வட்டக்கச்சி சில்வா வீதிச் சந்தி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழைநீர் தேங்கி நிற்பதைப் படத்தில் காணலாம்.



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர்தின விழாவில் மங்கள விளக்கைப் பாடசாலையின் உப அதிபர் பொன்னுத்துரை, ஆரம்பப் பிரிவின் உப அதிபர் யோ.விஸ்வநாதன் ஆகியோர் ஏற்றுவதையும் அருகில் மாணவமன்றத் தலைவன் பா.துஷ்யந்தன் நிற்பதையும் காணலாம்.

படங்கள் : வட்டக்கச்சி செய்தியாளர்

# சின்னஞ் சிறு செய்திகள்

### பச்சிலைப்பள்ளி ஆயுர்வேத வைத்தியசாலை

(பள்ளிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராமத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவமனை ஒன்று புதிதாக அமைக்கப்படவிருக்கிறது.

முகமாலை உப அலுவலகக் காணிக்குள் ரூபா இருபது லட்சம் செலவில், நிகொட் நிறுவன நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்படவிருக்கிறது.

கட்டடம் அமைப்பதற்கு ஆரம்ப வேலையாகக் காணி துப்புரவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. (21)

### சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சிநெறி

மன்னார் மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சிநெறி, அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் இந்தப் பயிற்சி நெறியில் பங்குகொண்டு பயிற்சி பெற்றுள்ளனர். இந்தப் பயிற்சிநெறி உளவளத்துறை நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டது.

### 10 கிணறுகள் அமைப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட கிராமங்களில் நிகொட் நிறுவன உதவியுடன், பத்து குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் வேலைகள் முடிவடைந்த நிலையில் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. (21)

### அடிப்படை வசதிகளற்ற பாப்பாமோட்டை மக்கள்

(மன்னார்)

மன்னார் - பாப்பாமோட்டைப் பகுதியில் 110 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ படை நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் - தற்போது மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இவர்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### மதகு இல்லாததால் சேதமடையும் வீதி

(வன்னி)

சேந்தாவடிக்கிராம வீதி அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்த வீதியில் மதகு அமைக்கப்படாமையால், தொடரும் மழை காரணமாக இந்த வீதி அரிப்புக்குள்ளாகி வருகிறது.

வீதி புனரமைப்பின்போது மழைநீர் குறுக்கறுத்துச் செல்லும் இடத்தில் - மதகு அமைக்கப்படாமையினாலேயே, தற்போது வீதி அரிப்புக்குள்ளாகி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுகிறது. இதையிட்டு மக்கள் விசனமடைந்துள்ளனர்.

### புனரமைக்கப்படாத வீதி

சோனகபிட்டி கிராமத்தின் பிரதான வீதி - புனரமைக்கப்படாமையால், இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியின் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டுள்ளபோதும், பாலங்கள் அமைக்கப்படாமையால் மழைநீர் வீதியைக் குறுக்கறுத்துச் செல்கிறது.

இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதுடன், இந்தப் பகுதியில் வசிக்கும் 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகின்றனர்.

### இருமாடிக் கட்டடம் அமைப்பு

கிளிநொச்சி - பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் இருமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் நிகொட் திட்ட நிதியுதவியின் கீழ் இருமாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததுள்ளது.

இந்தக் கட்டடம் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

### சிறுவர் பூங்கா அமைக்க நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி - பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இந்தப் பிரதேசத்தில் யு.என்.டி.பியின் நிதியுதவியுடன் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான பணிகள் இந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பணிக்காக யு.என்.டி.பி நிறுவனம் ரூபா மூன்றரை லட்சம் நிதியை ஒதுக்கியுள்ளது.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*

*திருக்குறள்*

## நமது நோக்கு

### இரு சிங்கள மனிதர்களின் பார்வையில் போரும், சமாதானமும், அரசியலும்

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் நியாயமானதும், உறுதியானதுமான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான இறுதிவாய்ப்பாக அமைந்துள்ள இன்றைய சூழ்நிலையை, மிகவும் தொலை நோக்குத்திறனுடன் அணுகி உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறுமேயானால், கடந்த இரண்டாண்டிற்கும் அதிக மான காலமாக நீடிக்கும் போர் நிறுத்த அமைதிச்சூழலுக்கு பெரும் ஆபத்து நேரிடுவதுடன், புரிந்துணர்வு உடன்பாடும் செயலற்றதாகிவிடும் எனத் தென்பகுதி அரசியல் நோக்கர் கள் கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்த சிங்கள எழுத்தாளர் ஒருவரும், கலைஞர் ஒருவரும் மேற்குறித்த செய்தியைக் கூறியதுடன் சிங்கள பாமரமக்கள் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்ந் தும் நீடிப்பதால் ஏற்படக்கூடிய எதிர்கால தேசிய அவலம் குறித்த சிந்தனையை வரவிடாது பாதுகாப்பதிலேயே தென் பகுதி அரசியல்தலைமைகள் இப்போது தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

''இரண்டாண்டுக்கும் அதிகமான காலச்சமாதானச் சூழல்போர்ப் பகுதிகளை மக்களின் சுற்றுலா மையங்களாக மாற்றி உள்ளதுடன், தென்பகுதியிலிருந்து பெருமளவில் வட பகுதியை நோக்கிவரும் சிங்கள மக்கள் போரற்ற சூழலில் தமது உறவுகளான படையினர் நிம்மதியாக இருப்பதையே பார்த்துச் செல்கிறார்களேயன்றி யுத்தசூழலில் அவர்கள் பட்ட அவலங்கள், உயிராபத்துக்களைப் பற்றிய சிந்தனைகளுக் குட்படுவதாக இல்லை.''

எல்லாவற்றையும்விட யுத்தம் தமிழர்களுக்கு ஏற்படுத் திய அழிவுகள், இழப்புக்கள் குறித்து ஆழமாக உணரும் தன்மையை எவரும் அவர்களுக்கு உணர்த்துவதுமில்லை.

எல்லாவற்றையும்விட நாகதீபத்திற்கான (நயினாதீவுக் கான ) யாத்திரை மட்டுமே அவர்களின் பிரதான பயண இலக் காகவும் அமைந்து விடுகிறது... அதற்கான சூழலை அர சாங்கம் ஏற்படுத்தி விட்டதாகவே அவர்கள் நம்புகிறார் கள்... எனவே, அரசாங்கம் தங்களுக்கு வேண்டியவற் றைச் செய்வதாக நினைத்து இருதசாப்தகாலப் போரின் தாக்கங்களை மறந்து விடுகிறார்கள். இதுவே துயரம்தரும் விடயம்.

உண்மையில் தமிழ் மக்களுக்கு - சிங்கள அரசியல் தலை மைகள் இழைத்துவிட்டுள்ள வரலாற்றுக் கொடுமைகள் குறித்து தென்பகுதி சிங்களப் பாமரமக்கள் எவரும் அறிந்து கொண் டிருக்கவுமில்லை, அறிந்துகொள்ள முயன்றதுமில்லை... அறியும் வாய்ப்பை எவரும் வழங்கியதுமில்லை... உண் மையில் அவர்களின் பிரதான பிரச்சினை பாண் விலை ஏறக்கூடாது என்பது மட்டுமே. அந்தளவுக்கு அவர்களின் சிந்தனை வட்டத்தை குறுகலாக்கி வைத்துள்ள சிங்கள அரசியல் தலைமைகள், தங்களின் அரசியல் இலக்குகள் தம்மால் எட்டப்படுவதற்கு சிங்கள மக்களின் அரசியல்தெளிவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டும் என்றே விரும்பு கிறார்கள்.

ஜே.வி.பி.யின் கடந்தகால மனித உரிமை மீறல்களை, காட்டுமிராண்டித்தன அரசியலை, ஜனநாயக விரோதச் செயற் பாடுகளை இதன் காரணமாகவே தென்பகுதி மக்கள் மிகச் சுலபமாக மறந்து அவர்களுக்கு வாக்களிக்கக்கூடியதாக உள்ளது.

பௌத்தமத கோட்பாட்டிற்கு எதிராக ஹெல உறுமய பிக்கு கள் நடந்துகொள்ளும் முறைகளை சிங்கள மக்கள் பொறு மையுடன் அங்கீகரிப்பதற்கும் இதுவே காரணம்.

இவையனைத்தும் அவர்களுடனான உரையாடல்களின் போது அவர்களின் வாய்மொழியாக வந்த கருத்துக்களாகும்.

பிரதான சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்குவது ஆபத்து என்றகொள்கை கொண் டவர்களாகவே உள்ளனர். நாட்டை பிரிக்கவிடோம் என்று பேசிக்கொண்டு அந்நிய மற்றும் அயலக மேலாதிக்க சக்திகளி டம் பகுதிபகுதியாக நாட்டைக் குத்தகைக்கு கொடுக்கத் தயாராகிவரும் இந்தக் கட்சிகளை சிங்கள மக்கள் இப் போதைக்குப் புரிந்துகொள்வார்கள் எனத் தோன்றவில்லை. இடதுசாரிகளும் இனவாதிகளாக மாறிவிட்டதுதான் தென் பகுதியில் ஆரோக்கியமான அரசியல் சிந்தனை செத்துப் போகக் காரணம் என்று கூறிய அந்த இருவரும் -

''சமாதானத்திற்கு கைகுலுக்குங்கள் ஆனால் போராட்டத்தைக் கைவிடாதீர்கள்'' என்று கூறியபோது வியப் பாக இருந்தது.

உங்களாலாவது எங்கள் நாடு அந்நியர்கள் கைகளுக் குள் விழுவது தடுக்கப்படட்டும். உங்கள் போராட்டம் தமிழர் களின் உரிமைகளுக்காக மட்டுமல்ல. சிங்கள மக்களின் உரிமைகளையும் வென்றுதரவேண்டும் என்று அந்தச் சிங்களக் கலைஞர் கூறி விடைபெற்றபோது சொன்னார். நாங்கள் மனிதர்களாக வாழ்வோம்.

இதனை எழுதவேண்டிய அவசியம் ஏற்படக் காரணம் சமாதானம் பற்றி வலியுறுத்துபவர்கள் சிங்கள ஆட்சியாளர் கள் குறித்தும், அரசியல் வாதிகள் குறித்தும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்.

சிங்கள அரசியல் மற்றும் மதபீடங்கள் சமாதானத்திற்கு மனப்பூர்வமாக சம்மதிக்கும் தயார்நிலைக்கு இப்போ தைக்கு வரப்போவதில்லை என்பதையே அந்த இருவரு டைய கருத்தும் உறுதிசெய்கிறது.

## நாடும் நடப்பும்




செய்தி:- ஆனந்தசங்கரியின் கடிதத்திற்கு பல்வேறு தமிழ் அமைப்புக்களும் கடும் கண்டனம்

# பயிலுனர் பட்டதாரிகளுக்கான கொடுப்பனவில் யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு அநீதி இழைப்பு

## பாதிக்கப்பட்டோர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் தற்போது பயிற்சிபெற்று வரும் பட்டதாரிகளுக்கு பயிற்சிக் காலத்தில் 6 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என அரசாங்கத்தால் அறிவிக்கப பட்டு நாடு முழுவதிலும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பட்டதாரி பயிலுனர்களுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் குடாநாட்டுப் பட்டதாரிகளுக்கு மட்டும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு அவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பட்டதாரி மாணவர்களால அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

இலங்கை முழுவதுமுள்ள பட்டதாரிப் பயிலுனர்களுக்கு பயிற்சிக் காலத்தில் 6 ஆயிரம் ரூபா படியாக வழங்கப்படு மென நிதியமைச்சினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், 15.10.2004 இல் பட்டதாரிப் பயிலுனர்களுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட் டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. அனைத்து நாட்களும் சமூகமளித்திருந்தும் யாழ்.மாவட்ட பட்டதாரிக ளுக்கு 5 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, தவிர்க்கமுடியாத காரணங்களினால (மரணச்சடங்கு, திருமணம், சுகயீனம்) ஒரு நாள் விடுமுறை எடுத்தவர்களும், மாவட்ட வைத்திய அதிகாரியின் மருத் துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளதுடன், அவர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்பட வில்லை. ஒருநாள் விடுமுறைக்கு மாவட்ட வைத்திய அதிகா ரியின் மருத்துவச் சான்றிதழைப் பெறமுடியாது. தனிப்பட்ட வைத்தியர்களிடம் (எம்.பி.பி.எஸ்) பெறப்பட்ட மருத்துவச் சான்றி தழ்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட பட்டதாரிப் பயிலுனர்களுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடச் சென்றபோது எமது கோரிக்கைகளை நிராகரித்தார்.

செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு இலங்கை முழுவதும் (யாழ்ப்பாணம் தவிர) கடந்தவாரம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், எமக்கான கொடுப்பனவு இன்னும் நியாயபூர்வமாக வழங்கப்படவில்லை. இந்த நிலையில் எமது கொடுப்பனவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மை யுடன் வேண்டுகிறோம்.'

மேலும், கரவெட்டி, கோப்பாய் பயிற்சி நிலையங்களில் இன்னும் எந்தவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதியால் சென்றவர்களை மோதித்தள்ளியது கன்ரர் !

## சிறுவன் உட்பட இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் வாகனம் வீதியில் சென்றுகொண்டிருந்த சைக்கிளுடன் மோதியதில் சிறுவன் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தாவடியில் இடம்பெற்றது. கோண்டாவிலைச் சேர்ந்த இரகுநாதன் தனுஜன் (வயது - 14), இராசதுரை பிரபா (வயது - 24) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தில் படுகாய மடைந்தவர்களாவர்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதா வது -

காயமுற்ற சிறுவன் தனது தந்தையாரின் கடைக்கு மதிய உணவுகொண்டு சென்றபோது, வீதியால் வந்த மேற்படி சம்பவத்தில் காயமுற்ற இளைஞர், தானும் சிறுவனின் சைக்கிளில் ஏறிச்சென்றுகொண்டிருந்தார். அவ்வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்த தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான கன்ரர் ரகத்தைச் சேர்ந்த வியாபார வாகனம் சைக்கிளில் மீது மோதியது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரு கின்றனர்.

விபத்துக்குள்ளான கன்ரர் வாகனத்தையும், சைக்கிளி ளையும் பொலிஸார் - பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

(தீ,101)

# சேது சமுத்திரத் திட்டத்தால் கொழும்புத் துறைமுகம் பாதிக்கும்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் சேது சமுத்திரத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டால் கொழும்புத்துறைமுகத் தின் நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்படும் எனத் துறைமுக அதிகாரசபையின் தலைவர் டிலிப்பா விஜய சுந்தர தெரிவித்தார்.

இந்தத் திட்டம் குறித்த முழு விபரங்களும் தம்வசம் இல்லாத காரணத்தால் இலங்கை எதிர்நோக்கும் பாதிப் புக்கள் குறித்து தற்போது எதுவும் தெரிவிக்கமுடியா தெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாக்கு நீரிணையின் ஊடாக இந்தக் கால்வாய் அமைப்பதன்மூலம், சில அரியவகையான கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் பவளப் பாறைகளும் அழிந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## விடுதலையான

# ஊர்காவல் படையினரின் குடும்பத்தினருக்கு உதவி !

(திருகோணமலை)

விடுதலை செய்யப்பட்ட ஊர்காவற்படையினரின் குடும பத்துக்கு உதவிகளை வழங்கவுள்ளதாக, ஜனாதிபதி யின் பிரதிநிதியாக கலந்துகொண்ட சட்டம் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட ஊர்கா வல் படையினர் இருவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவி னரால் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட னர்.

இதனை அடுத்து கடந்த மாதம் 17ஆம் திகதிவரை திருகோணமலைப் பகுதியில் அவர்களின் உறவி னர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட் டமும் கைவிடப்பட்டது.

வாரநோக்கு

யாழ்வன்

# மெல்ல மெல்ல ஆட்டம் கண்டுவரும் அரச பேரினவாத சக்திகள்

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஒரு அங்கமாகச் செயற்பட்டுவரும் ஊடுருவித் தாக்கும் அணி கலைக்கப்பட்டுவிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த போது, அதை அடியோடு மறுத்திருக்கிறார் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட.

இன்னொருபுறம் இராணுவத்தின் முக்கிய பொறுப்புக்களில் இருந்த அதிகாரிகள் கட்டாய விடுமுறையல் வீட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர். இன்னொருபுறம் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள்ளே பிளவுகள் ஏற்பட்டு, தொடராக இராஜினாமாக்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் திருகோணமலையில் இனவாதிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹர்த்தால் பிசு பிசுத்துப் போயுள்ளது. விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் கடற்புலிகளின் தளபதி சூசைக்கும் இடையே பிணக்குகள் என்ற புரளிவேறு, தென்னிலங்கை ஊடகங்களால் கிளறப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பத்துப்பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என கடந்தவாரம் சுவாரஸ்ய நிகழ்வுகளும், முக்கியமான சில நிகழ்வுகளும் நிறைந்தவாரமாகக் கழிந்து சென்றுள்ளது.

ஊடுருவித்தாக்கும் இராணுவ அணி பற்றிய விபரம் கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன் மிலேனியம் சிற்றி சுற்றிவளைப்புடன் வெளியுலகுக்குத் தெரியவந்தது. இந்த அணியிலே இடம்பெறுவோரில் அநேகமானோர் தமிழ் ஆயுதக்குழுக்களின் முன்னாள் உறுப்பினர்கள். இவர்களைக் கொண்டே இந்த அணியை இயக்கி வந்த இராணுவம், இத்தகைய தமிழ்க் குழு உறுப்பினர்களின் தொடர் கொலைகளுக்குப் பின்னர் இந்த அணியின் பலமும் ஆட்டம் கண்டது. புலனாய்வாளர்களாலேயே தமக்கு நேரப் போகும் ஆபத்தைப் புலனாய்வு செய்ய முடியாமல் வீடுகளில் வைத்தும், வீதிகளில் வைத்தும் அடுத்தடுத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.




இதனால் இந்த அணியைத் தொடர்ந்து செயற்படவைப்பது என்பது தற்போது முடியாமலேயேயுள்ளது. அத்துடன், இதுவரை இந்த அணியில் அங்கம் வகித்த தமிழ் ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்களும் உயிரின் மேலே கொண்ட அக்கறை காரணமாக, தாமாகவே இந்த அணியை விட்டு விலகிவருகின்றனர். இந்த நிலையில் புதியவர்களை இணைத்துக் கொள்வது என்பது முடியாதவிடயமாகவே உள்ளது.

தர்மசங்கடமானதொரு நிலையிலே மாட்டியுள்ள இராணுவத் தலைமை தானாக இந்த ஊடுருவித்தாக்கும் அணியைக் கலைக்க எண்ணாவட்டாலும், இயல்பாகவே இந்த அணி கலைந்து போவதற்கான வாய்ப்புக்கள் தற்போது தோன்றியுள்ளன. அதைத் தடுக்கும் நோக்கில் செயற்படும் இராணுவத் தலைமை திடீரென முளைத்த தமிழின விரோதிகள் சிலரையும், அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிலரையும் பாவித்து இந்த அணிக்குப் புத்துயிர்ப்புக் கொடுக்க முயல்கிறது.

குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்ட கருணா குழுவைப் பாவித்து மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட கிழக்கின் பகுதிகளிலுள்ள தமிழ் இளைஞர்களை பலிக்கடாக்களாக்கி பணத்தைக் கொண்டு அவர்களை விலைக்கு வாங்கி, ஊடுருவித் தாக்கும் அணியை மீண்டும் புத்துயிர்ப்பு அடையச் செய்வதற்கான முயற்சிகள் முழு மும்முரமாக திரை மறைவிலே நடைபெற்று வருகின்றன.

சிங்கள அரசையும் இராணுவத்தையும் பொறுத்தவரையிலே என்றுமே அவர்களைத் தாக்கும் சக்தியாக "தமிழர்களே" இருந்துள்ளார்கள். இது இலங்கையின் வரலாற்றை அறிந்துள்ளோருக்குப் புரியும் விடயம். காலங்காலமாக இலங்கை அரசிலே அங்கம் வகித்த சில தமிழர்களின் புத்திசாலித்தனமும் நரித்தந்திர மூளையுமே அரசைப் பல ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியதுடன், இலங்கை இரணடாகப் பிளவுறாமல் இருக்கவும் துணை செய்தன.

ஆங்கிலேயர்வசம் இலங்கையிருந்த ஆரம்ப காலத்திலே சேர். பொன்.இராமநாதன், சேர். பொன்.அருணாசலம் சகோதரரர்களே இலங்கையரை வழிநடத்தும் தலைவர்களாகச் செயற்பட்டதுடன், சுதந்திரத்துக்காகவும் பாடுபட்டார்கள். 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் நின்று நிலைப்பதற்குத் தமிழர்களே துணை நின்றார்கள்.

ஆனால், மிகவும் மனவேதனையான விடயம், இவ்வாறு துணை நின்ற தமிழர்களுள் அநேகமானோர் தமது இனத்தின் அழிவுக்குத் துணைபோனவர்களாகவே மாறினார்கள். இதற்காக அவர்களுக்கு ஆடம்பர வாழ்க்கை, அரசியல் பந்தோ பஸ்த்து, பாதுகாப்பு எனப் பல பரிசுகள் வழங்கப்பட்டன. "நக்குண்டார் நாவ ளரார்" என இவர் களும் தமது இறுதிக் காலம் வரை எஜமான விசுவாத்தோடு செயற்பட்டுச் சீரழிந்தனர்.

திருச்செல்வம், நீலன் திருச்செல்வம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஞானசூரியர், கதிர்காமர், டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி, கருணா என இத்தகையோரின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. சிங்கள தலைமைகளைப் பொறுத்தவரையில் ஆள்வது மட்டுமே அவர்களுக்குரிய வேலையாக இதுவரை இருந்து வருகிறது. ஆனால், அவர்கள் ஆட்சி புரிவதற்கு வேண்டி ஆலோசனை வழங்கி வருவது தமிழர் தரப்பு.

தற்போதைய அரசியலிலும் கூட கதிர்காமர் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சராக மட்டும் செயற்பாடாது, ஜனாதிபதியின் பிரத்தியேக ஆலோசகராகவும் செயற்பட்டு வருகிறார். இவரது ஆலோசனைக்கே ஜனாதிபதியும் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்றமை கண்கூடு. கதிர்காமரின் ஆலோசனை மற்றும் அயராத உழைப்பு என்பன காரணமாகவே விடுதலைப்புலிகள் இயக்கம் பல நாடுகளில் தடைசெய்யப்பட்டதுடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் சரியான திசையை நோக்கி நகர்த்தப்படவில்லை.

இவ்வாறு காலத்துக்குக்காலம் சிங்கள ஆட்சி பீடங்களின் மூளைப்பலமாகச் செயற்பட்டு வந்த தமிழர் தரப்பினர் சிலர், தற்போது புலனாய்வுப் பணியின் ஊடாகவும் பாதுகாப்புப் பலமாக செயற்பட்டு வருகின்றனர். இலங்கை அரசும் இராணுவமும் எதிர்கொள்ளும் சிக்கல்கள், நெருக்கடிகள் என்பவற்றுக்குத் தீர்வுகாணும் சக்தியாகவும் இந்தப் புலனாய்வாளர்கள் விளங்குகின்றனர். கருத்தியல் ரீதியாகவும் அரசியல் மற்றும் போரியல் ரீதியாகவும் அரசுக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களைக் கொலை செய்வதும், காணாமற் போகச்செய்வதும் அவ்வப்போது தமிழ் - முஸ்லிம் மக்களிடையே திரைமறைவு, சதி முயற்சிகளின் மூலம் பிணக்குகளைத் தூண்டிவிட்டு, கலவரங்களை ஏற்படுத்தி, தமிழ் பேசும் மக்களின் இன ஐக்கியத்தைச் சிதறடிப்பதும் இந்தப் புலனாய்வாளர்களின் முக்கிய பணியாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தையும் அதன் வளர்ச்சியையும் மழுங்கடிக்கச் செய்வதே ஒரே நோக்காக உள்ளது. இந்த நோக்கத்துக்கு வேட்டு வைக்கப்பட்டு வருகின்றமையினாலேயே அரசும் இராணுவமும் தற்போது கையறு நிலையில் உள்ளன. அதாவது, இராணுவத்தின் ஊடுருவித் தாக்கும் அணி கலைந்து போவது அரசுக்குக் கவலைதரும் விடயமாகவே உள்ளது. ஏனெனில் பல இக்கட்டான வேளைகளில் இந்த ஊடுருவித் தாக்கும் அணி தனது கை வரிசைகளைக் காட்டியதன் மூலமாக அரசு தப்பிப்பிழைத்துக் கொண்டதுண்டு. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் உட்புகுந்து அவர்களின் உயர்மட்டப் பொறுப்பாளர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தி சில முயற்சிகளிலே வெற்றியும் கண்டுள்ளது ஊடுவித் தாக்கும் அணி.

ஒரு சமயம் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருக்கு வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு இந்த ஊடுருவித்தாக்கும் அணி வன்னிப் பகுதிக்குள் ஊடுருவி இருந்தமையை வெளிக் காட்டியது. விடுதலைப்புலிகளின் சிறப்புப் படையணிக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றி வந்த கேணல் சங்கர் கிளைமோர் குண்டு வெடிப்பிலே கொல்லப்பட்டமை, ஆழ ஊடுருவித் தாக்கும் அணி அதிவேகமாகப் பரவியமையை அறியக் கூடியதாகவிருந்தது.

முற்று முழுதாக விடுதலைப் போராட்டத்தை சிதறடிக்கும் நோக்கிலேயே இயங்கி வந்த இந்த அணியினரின் சிதறலானது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகவேயுள்ளது. தனக்கான புலனாய்வுப் பலத்தையும், பாதுகாப்புப் பலத்தையும் இதன் மூலமாக இழக்க வேண்டியேற்படும் இது பின்நாளில் தமிழீழம் உருவாகுவதற்கான வழியாக அமைந்து விடும் என்பதே இன்று அரசுக்கு எழுந்துள்ள அச்சமாகும். இந்த அச்சத்தில் இருந்து மீண்டு கொள்வதற்காக மிக வேகமாகவும், இரகசியமாகவும் தன்னை என்றுமே தாங்கும் சக்தியாக விளங்கும் தமிழின துரோகிகளைப் பாவித்து மீணடும் ஆழ ஊடுருவித்தாக்கும் அணியை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது இவ்வாறு இருக்க, அண்மைக்காலமாக ஜாதிக ஹெல உறுமய கட்சியிலே திடீர் திடீர் இராஜினாமாக்கள் இடம்பெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக திலக் கருணாரத்தினவின் இராஜினாமா சிரிப்புக்கிடமானது. முழுவதும் தன்னை இனவாதத்தினாலேயே உருவாக்கிக் கொண்டுள்ள திலக் கருணாரத்தின நாடாளுமன்ற அரசியலுக்குள்ளும் இனவாதத்தை புகுத்துவதறகாகவே, மணிகட்டிய மாடுகளாக பௌதத பிக்குகளைப் பாவித்து ஹெல உறுமயவைக் கைவிட்டு, ஜாதிக ஹெல உறுமயவைத் தோற்றுவித்து தேர்தல் கலத்திலே குதித்தார். அவரது திட்டமும், எண்ணமும் சிங்கள மக்களின் ஏமாளித்தனம் காரணமாக நிறைவேறினாலும், திலக் கருணாரத்தின ஏமாளியாக்கப்பட்டார்.

வளர்த்த கடா நெஞ்சிலே பாய்ந்த மாதிரி, அவரது கட்சியிலே அவருக்கு ஆப்பு வைத்து அதனைக் கைவிட்டு, வேறொரு கட்சிக்குத் தாவ வேண்டிய சூழ்நிலைச் சிக்கல் உருவானது. அவரோடு இணைந்தவர்களாகவோ அல்லது சுயாதீனமாகவோ அல்லது சுயாதீனமாக இயங்குபவர்களாகவோ உள்ள வேறு சில கட்சி உறுப்பினர்களும் தமது நாடாளுமன்றப் பதவியை துறந்ததுடன், கட்சி அரசியலையும் விட்டு ஒதுங்கயுள்ளனர். பட்டது போதும் என உணர்ந்த பௌத்த பிக்குகளும் தமது பழைய பாதைக்குத திரும்பியுள்ளனர். 'நாய' பார்க்கும் வேலையை கழுதை பார்க்கக் கூடாது என முடிந்த, பௌத்த பிக்குகளின் அரசியற் பிரவேசம் மெது மெதுவாக ஆட்டங்காண ஆரம்பித்துவிட்டது.

திருகோணமலையிலே ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலும் பிசுபிசுத்துப்போய்விட்டது. இது இனவாதிகள் வயிற்றிலே நிச்சயமாக புளியை கரைத்திருக்க வேண்டும். ஏனெனில் ஒரு வாரதுக்கு முன்னர் தமிழர்கள் சமாதானத்துக்கு ஆதரவாக நடத்திய ஹர்த்தால் முழுவெற்றி கண்டுள்ள நிலையில், சமாதானத்துக்கு எதிரான கால் திட்டமாவது கைகூடவில்லை. இந்த அடிப்படையையாவது விளங்கிக் கொண்டால் இனியும் இனவாதம் நிலைக்க நியாயமில்லை.

எந்த வழியாலும் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவதையே நோக்காகக் கொண்ட இந்த இனவாதிகள், ஊடகங்களைப் பாவித்தும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள் மீண்டுமொரு பிளவு என கதையை வளர விட்டு, அதிலே சிலரை மூக்கை நுழைக்க வைத்து, கருணாபோல இன்னொருவரைக் காணபிக்க முயல்கிறது இவர்களது திட்டங்கள், பலமான தலைமைத் தமிழர்களுக்கு என்றுமேயுள்ள நலமையில் கைகூடவே மாட்டாது. கருணாக்கள தொடராக உருவாக்கப்பட்டாலும், விடுதலைப் புலிகளையோ அல்லது அவர்களது போராட்டத்தையோ எவராலும் அழக்க முடியாது.

இது காலங்கடந்தாவது என்றோ ஒருநாள் முழு உலகுக்குமே உறைக்கப் போகின்ற உணமையாகும். ★




## தரிசனம் - ஒரு தரிசனம்

'ஐ.நா.சபை சார்ந்த உலக சுகாதார நிறுவனத்தில் பணிபுரியும் அளவுக்கு உயர்ந்த போதும், தான் ஓர் தமிழ் எழுத்தாளன் என்று கூறப்படுவதில் பெருமையடைகிறவர் நந்தி' என்று 'தரிசனம்' தொகுதியின் பதிப்புரையில் குறிப்பிடப்படுவது சத்தியமானது.

நாவல், சிறுகதைகளை மட்டுமன்றி, மருத்துவ, ஆன்மீக, சிறுவர் நூல்களையும் தமிழ்கூறு நல்லுலகுக்களித்துள்ள நந்தி நான்காவது சிறுகதைத் தொகுதியான 'தரிசனம்' சென்னையில் வெளியாகி இரண்டாண்டுகளாகிவிட்ட போதிலும், அவருடைய ஏனைய நூல்கள்போல இங்கு அதிகம் அறியப்படாமற் போனமை, பரவலான வாசகர்களின் இழப்பாகவே கொள்ளப்பட வேண்டும்.

கார்த்திகேசு சிவத்தம்பியின் அறிமுகக் குறிப்பு, வல்லிக் கண்ணனின் மதிப்புரை ஆகியவற்றுடன் வெளியான இந்தத் தொகுப்பில் பன்னிரு கதைகள். 1960 ஆம் ஆண்டில் குமுதத்தில் வெளியான 'யானையின் காலடியில்' தவிர்ந்த ஏனைய யாவும் தொண்ணூறுகளிலும் அதன் பின்னரும் எழுதப்பட்டவை.

ஆசிரியரின் சமூகப் பிரக்ஞையானது லௌகிகத்தையும் தாண்டி ஆத்மீகத் தளத்திலும் படருவதை இந்தத் தொகுதியி[illegible] காணலாம். இன்னொரு விதமாகச் சொல[illegible] தாயின், தனிமனிதனதும், சமூகத்தினதும் - உடல், உளம், ஆன்மா மூன்றிலும் ஆரோக்கியம் நாடும் படைப்புக்கள் இவை. இப்படிக் கூறுவதால் இந்தத் தொகுப்பின் கதைகள் நேரடிப் போதனைகளாக அமைந்துள்ளன என எவரும் கருதிவிடலாகாது. பாடங்கள், படிப்பினைகள், போதனைகள் எல்லாம் இருக்கவே இருக்கின்றன. ஆனால், றேந்தைத் துணியின் சித்திரங்களாக, கதை சொல்லல் என்ற கோடுகளினூடே புலப்படுங் கோலங்களாகவே அவை அமைகின்றன.

சமூக, விமர்சனங்கள் அங்கதங்களாவதற்கு நல்ல உதாரணம், உணர்ச்சிகள் கதை இலங்கையில் தமிழர்களின் இருப்புக் கேள்விக்குறியாக இருந்த நிலையைப் பதிவு செய்பவை மீண்டும் கேள்விகள் உருவாகின்றன' மற்றும் 'அர்த்தங்கள்' ஆகியவை சீதனப் பிரச்சினையில் அவதானிக்கப்படாத இன்னொரு முகத்தை அல்லது மூலத்தைக் காட்டுவது 'கொடுமைக்கு அப்பால்'. மனோசக்தியி[illegible] வலிமையை மிக எளிதாய் விளக்குவ[illegible] 'மருந்துக்கு அப்பால்'. தரிசனமென்பது, வெறும் கட்புலக் காட்சிக்கும் அப்பாலான ஒன்று என்பதைச் சித்திரிக்கிற மகுடக் கதையானது, இலக்கிய தரிசனமொன்றையும் வாசகர்களுக்குச் சிந்திக்கச் செய்கிற சக்தி வாய்ந்தது. இந்தக் கதைகளுக்கிடையே வைத்தியரான ஓர் படைப்பாளியால் மட்டுமே எழுதக்கூடிய வரிகள் ஆங்காங்கே தம்மை இனங்காட்டு கின்றன.

இந்தத் தொகுதியைப் படித்து முடித்ததும் - எந்தவொரு நல்லிலக்கிய நூலையும் போலவே மானுடத்தின் எண்ணற்ற பரிமாண தரிசனங்களையும், அதன் மேன்மை நாட்டத்தையும் வாசகனில் தொற்றச் செய்து விடுகிறது என்பதுடன், இன்னுமொன்றையும் சற்று அழுத்தமாகவே உணரச் செய்கிறது. தொகுதியின் பெரும்பாலான கதைகள், அமுக்கப்பட்டு இறுக்கப்பட்ட நாவல்களா என்கிற கேள்வி அது. சிறுகதைகளுக்கான ஒருமை மீறப்படுகிறதெனில் அதன் பொருள், தம் படைப்பின் உருவப் பிரக்ஞையையும் மீறும் சமூகப் பிரக்ஞை நந்தியின் உள்ளத்தில் குமுறுகிறது என்பதேயாகும். மருத்துவ- விஞ்ஞான அறிவு, அநுபவ மெய்ம்மை, ஆத்மீக உணர்வு, மானுட மேன்மையின்பாலான முனைப்பு - இவை அவரது எழுத்தின் இயல் பான சேர்மானங்கள். அவர் எழுத உட் கார்ந்ததும் இவையாவும் அவரையும் மீறி மடை திறந்து கொள்கின்றன என்றேபடுகிறது. உண்மையான ஒரு கலைப் படைப்புக்கு வேண்டிய அடிப்படை இதுதானே யன்றி, கைவினைப் பாங்கான வெற்று உருவப் பிரக்ஞையன்று என்பதுதான் உண்மை.

தன்னுள் உள்ளதெல்லாவற்றையும் அள்ளித் தள்ளிக்கொண்டு பிரவாகிக்கிற வெள்ளந்தான் இலக்கிய ஆக்கம். அதுதான் நந்தியின் இயற்கை; இலக்கியம். அந்தப் பிரவாகம் 'ஊர் நம்புமா?'வில் ஊற்றெடுத்து இன்றுவுரை பிரவகிப்பது இதனால்தான். இன்னும் வற்றாத தமது படைப்பாற்றல் ஒன்றின் வலிமையால் மட்டுமே இலக்கிய உலகில் தமது இருப்பை நிறுவுகிறவர் நந்தி. ★

சாந்தன்

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# இஸ்ரேல் படையினர் தாக்குதல் ; 4 கிளர்ச்சிவாதிகள் உயிரிழப்பு!



(டெல்அவில்)

காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில், நான்கு பலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டனர். காஸாப் பிரதேசத்தில் உள்ள பண்ணை ஒன்றின் முன்னே உள்ள பாதுகாப்பு வேலி ஒன்றினைத் துண்டித்துவிட்டு அதனூடாக இஸ்ரேலிய இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தீவிரவாதிகள் இருவர் ஊடுருவ முற்பட்டவேளையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இவர்கள் வெடிகுண்டு பொருத்தப்பட்ட இடுப்புப் பட்டியுடனே ஊடுருவ முற்பட்டதாகவும், இஸ்ரேலிய இராணுவப் பகுதிக்குள் தற்கொலைத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடனேயே இவர்கள் ஊடுருவியதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. கொல்லப்பட்டவர்கள இருவரும் தமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கோரியுள்ள ஹமாஸ் அமைப்பு இவர்கள் இருவரும் எதற்காக இஸ்ரேலிய இராணுவப் பகுதிக்குள் ஊடுருவினார்கள் எனத் தெரிவிக்கவில்லை.

இவர்கள் இருவரும் பண்ணையில் வேலைசெய்யும் விவசாயக் குடியிருப்புகள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்காகவே ஊடுருவியதாகத் தெரிவித்துள்ள பி.பி.ஸியின் நிருபர் - இஸ்ரேல் இராணுவத்தினர் காஸாப் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வேலிகளைத் தீவிரமாகக் கண்காணித்துவருகின்றபோதிலும், இராணுவத்தினரின் கண்களில மண்ணைத் தூவிவிட்டு இலாவகமாகப் பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஊடுருவியதாகத் தெரிவித்தார்.

மேலும கடந்த ஆறு மாதகாலப்பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவப் பகுதிக்குள் பலஸ்தீனத் தீவிரவாதிகள் மேற்கொண்ட இரண்டாவது ஊடுருவல் நடவடிக்கை இது எனவும் அவர் தெரிவித்தார். இதேசமயம் காஸாவின் வட பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு பலஸ்தீனத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலியக் குடியிருப்புப் பகுதியில் வெடிகுண்டு ஒன்றைப் புதைக்கும் நடவடிக்கையில் இவர்கள் இருவரும் ஈடுபட்டிருந்தவேளையே சுட்டுக்கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

# புதிய வேலைவாய்ப்புகள் எதையும் ஜனாதிபதி புஷ் உருவாக்கவில்லை

## குற்றம் சாட்டுகிறார் ஹெரி



அதிபர் ஜோர்ஜ் புஷ் தனது பதவிக்காலத்தில் ஒரு அமெரிக்கருக்குக்கூட வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. சாதாரண அமெரிக்கர் குடும்பத்தைப்பற்றி அவருக்குத் தெரியவில்லையா அல்லது கவலைப்படவில்லையா என்பது புதிராக உள்ளது என்று ஜனநாயககட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறுகிறது. குடியரசுக்கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி சார்பில் அவரை எதிர்த்து ஜோன் ஹெரி களத்தில் இருக்கிறார். இருவருக்குமிடையில் பிரசாரம் உச்சக் கட்டத்தில் நடக்கிறது. இதுவரை இருவரும மூன்றுமுறை நேருக்குநேர் சந்தித்து விவாதித்து இருக்கின்றனர். ஜனநாயகக் கட்சிக்குச் செல்வாக்கு நிறைந்த விஸ்கான்சின் மாநிலத்தில் ஜோன் ஹெரி பயணம் மேற்கொண்டு தீவிர பிரசாரம் செய்தார். அங்கு மில் வாக்கி என்ற இடத்தில் நடந்த பேரணியில் அவர் பேசியபோது -

அமெரிக்க முன்னேற்றம் குறித்து அதிபர் புஷ்ஷிற்கு எந்த சிந்தனையுமில்லை. தொடர்புமில்லை. அதை மாற்றிக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. அவரது அரைகுறை நிர்வாகத்தால் அமெரிக்க பொருளாதாரம் நலிந்து வருகிறது. கடந்த 72 ஆண்டுகால குடியரசுக்கட்சி அதிபர்கள் வரலாற்றில் ஒரு அமெரிக்கருக்குக்கூட வேலைவாய்பபை உருவாக்காதவர் அதிபர் ஜோர்ஜ் புஷ்தான்.

சாதாரண அமெரிக்கக் குடும்பம் பற்றி அவருக்கு தெரியவில்லையா அல்லது கவலைப்படவில்லையா என்பது புரியவில்லை. அவர் மீண்டும் வெற்றி பெற்றால் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு, சுகாதாரம், பாதுகாப்பு, வருமானம் இருக்காது. அரசு பற்றாக்குறை உயரும். இதற்காக அவர் வெட்கப்படுவதை விட்டு பெருமைப்பட்டால் அவரை நான் வெறுக்கிறேன்.

அமெரிக்க வேலைவாய்ப்புக்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாவதை அதிபர் புஷ் தடுக்கத் தவறிவிட்டார். சாதாரண அமெரிக்கர்களின் உழைப்பில் உருவான பெரும் பணக்காரர்களுக்கும், பெரிய கம்பனிகளுக்கும் வரிச்சலுகைகளை வாரிவழங்குகிறார். ஈராக்கில் அவருடைய அணுகுமுறை தவறாக முடிந்திருக்கிறது. மீண்டும் அவர் வெற்றி பெற்றால் வியட்நாம் போரில் நடந்ததுபோல இராணுவச் செலவு அதிகரிக்கும் எனத் தெரிவித்தார்.

# விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை சோயூஸ் விண்கலம் சென்றடைந்தது!

ரஷ்யாவின் 'சோயூஸ்' விண்கலம் மூன்று விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைக் கடந்த சனிக்கிழமை சென்றடைந்தது.

அமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்ரேலியா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் ஒன்றிணைந்து விணவெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தை அமைத்துவருகின்றன. இந்த வண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் அமெரிக்க மற்றும் ரஷ்ய வண்வெளி வீரர்கள் பல மாத காலம் தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்த வீரர்களுக்குத் தேவையான ஒட்சிசன், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்கலங்கள் விண்ணுக்குச்சென்று விநியோகித்து வருகின்றன.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறி, கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு விண்வெளி வீரர்கள் பலியாகினர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, விண்ணுக்கு விண்கலம் அனுப்புவதை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம், சர்வதேச விண் ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றுவருகிறது. கடந்த 14 ஆம் திகதி கஜகிஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து 'சோயூஸ்' விணகலம் மூலம் இரண்டு ரஷ்ய வீரர்களும், ஒரு அமெரிக்கரும் விண்ணுக்குச் சென்றனர். கொலம்பிய விணகல விபத்துக்குப் பிறகு நான்காவது முறையாக சோயூஸ், விண்ணுக்குச் சென்றுள்ளது.

விண்ணில் சோயூஸ் செலுத்தப்பட்டு 49 ஆவது மணி நேரத்தில் கடநத சனிக்கிழமை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச் சென்றடைந்தது.






# தீப்பற்றி எரியும் அடுக்குமாடிக் கட்டடம்

(லண்டன்)

வெனிசுலா நாட்டில் உள்ள கார்காஸ் நகரில் 56 அடுக்குமாடி கட்டடம் உள்ளது. இந்தக் கட்டடநதான் வெனிசுலா நாட்டிலேயே மிகப்பெரிய கட்டடம். இங்குதான் அமைச்சர்களதும் மற்றும் அரச அதிகாரிகளினதும் அலுவலகங்கள் உள்ளன. இங்கு திடீரெனப் பயங்கரத் தீ விபத்து ஏறபட்டது.

சுமார் 16 மாடிகளில் இந்தத் தீ பரவியது. இதனால் அந்தப் பகுதி முழுவதும் புகைமூட்டமாகக் காட்சி அளித்தது. ஹெலிகொப்ரரில் பறந்து தீயை அணைக்கும் பணி நடந்தது. தீபபற்றி எரியும் அடுக்கு மாடிக் கடடடத்தைப் படத்தில் காணலாம்.



## குண்டுவெடிப்புகளின் எதிரொலி

# ஈராக்கிலிருந்து வெளியேற கிறிஸ்தவர்கள் தீர்மானம்!

ஈராக் தலைநகர் பாக்தாத்தில், தொடர்ச்சியாக நடந்த குண்டு வெடிப்புகளில் 5 கிறிஸ்தவ தேவாலயங்கள் சேதமடைந்தன. இதைத தொடர்ந்து அங்கே வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கருதும் ஈராக் கிறிஸ்தவர்கள், அந்த நாட்டை விட்டு வெளியேறப் போவதாகக் கூறியுள்ளனர்.

பாக்தாத்தில் உள்ள 5 கிறிஸ்தவத் தேவாலயங்களில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணி தொடங்கித் தொடர்ச்சியாகக குண்டுகள் வெடித்தன. இதில் அந்தத் தேவாலயங்கள் சேதமடைந்தன. ஒரு மணி நேரம் நடந்த குண்டுவெடிப்பில் ஆலயங்களுக்கு முன்பு நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்களும் சேதமடைந்தன.

இநதச் சம்பவம் ஈராக்கில் வாழும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் மாதம் இது போல நடந்த குண்டுவெடிப்பில், 10 பேர் பலியானார்கள். 50 இற்கும் மேற பட்டவர்கள் காயமடைந்தனர். ஈராககில் 7 லட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். இது மொத்த மக்கள் தொகையில் 3 சதவீதமாகும்.

5 ஆலயங்களில் குண்டு வைத்தவர்கள் யார் என்பதும், என்ன நோக்கத்தில் இதைச் செய்தார்கள் என்பதும் தெரியவில்லை.

இந்தக் குண்டுவெடிப்புக்குக் காரணமாக விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட கிறிஸ்தவர்கள் ஈராக்கை விட்டு வெளியேறும் நேரம் வந்து விட்டதாகக் கருதுகிறார்கள். ஏற்கனவே, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஈராக்கை விட்டு வெளியேறி ஜோர்தான் நாட்டில் குடியேறியுள்ளனர்.

முற்றிலும் இடிந்து விழுந்து விட்ட ஒரு தேவாலயம் முன்பு நின்றிருந்த 40 வயது சமீர் ஹோர்மிஸ் கூறுகையில் - ஈராக்கில் நாங்கள் வசிப்பதை அவர்கள் விரும்பாவிட்டால், அதைச் சொல்லட்டும் நாங்கள் வெளியேறி விடுகிறோம். நான் ஈராக்கைவிட்டு வெளியேற முடிவு செய்துவிட்டேன் என்றார்.

சதாம் ஆட்சிக் காலத்தில் எங்களுக்குக் கொஞ்சமாவது அதிகாரம் இருந்தது. என்றாலும், நாங்கள் மிரட்டப்படவில்லை. உயிருக்குப் பாதுகாப்பு இருந்தது. இப்போது எங்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# ஒன்பது ஈராக் பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டனர்!



ஈராக்கில் தற்போது அமெரிக்கக் கூட்டுப்படையினரின் கண்காணிப்பில் இடைக்கால ஆட்சி நடக்கிறது. இதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை ஈராக் அரசிடம் ஒப்படைக்கும் பணியில் அமெரிக்கப் படை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு ஜோர்தான் நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கர்பாலா நகருக்கு அருகே உள்ள ஜோர்தான் சர்வதேச பொலஸ் பயிற்சி மையத்தில் அவர்கள் 8 வாரம் பயிற்சிபெற்றனர். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த 9 பொலிஸார் ஈராக்கிற்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

பாக்தாத்திலிருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் லதிபியா, யூசுபியா ஆகிய நகரங்களுக்கிடையே பொலிஸாரின் மினிபஸ் சென்றபோது துப்பாக்கி ஏந்திய ஒரு கும்பல் வழிமறித்தது. அவர்கள் திடீரென பஸ்ஸுக்குள் புகுந்து 9 ஈராக் பொலிஸாரையும் சுட்டுக்கொன்றனர்.

மேலே ஜோர்தானில் பயிற்சி பெற்ற ஈராக் பொலிஸாரைப் படத்தில் காணலாம்.

## ஆப்கானில் நடந்த தேர்தல்

# எண்ணப்பட்ட வாக்குகளின்படி ஹமீட் ஹர்சாய் முன்னிலையில்

ஆப்கானில் நடைபெற்றுவரும் வாக்கெண்ணும் பணியில் இதுவரை எண்ணிமுடிக்கப்பட்ட ஒரு மில்லியன் வாக்குகளில் இடைக்கால ஜனாதிபதி ஹமீர் ஹர்சாய் 62.6 வீதம் முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானின் 34 மாகாணங்களில் 29 இல் நடந்த தேர்தலில் - இதுவரை 13 வீத வாக்குகளே எண்ணிமுடிக்கப்படடுள்ளன. நேற்றுக்காலை வெளிவந்த தகவல்களில் எண்ணிமுடிக்கப்பட்ட 1.04 மில்லியன் வாக்குகளில், ஹமீர் ஹர்சாய் 62.6 வீத வாக்குகளைப்பெற்று முன்னிலை வகிக்கின்றார். இவரது பெரும்பான்மைக்கு இந்தத் தொகையே போதுமானதாக உள்ளது.

ஆனாலும், ஹர்சாய்க்கு அடுத்தபடியாக யூனஸ் குவானனி நடைபெற்றுமுடிந்த தேர்தலில் மக்களின் வாக்குகளைத் தேர்தல் ஏற்பாட்டாளர்கள் கொள்ளையடித்ததாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹமீட் ஹர்சாய்க்கு ஆதரவாகத் தேர்தல் ஏற்பாட்டாளர்கள் வாக்குக்ளைக் கொள்ளையடித்தமை தொடர்பான ஆதாரம் தன்னிடம் உள்ளதாகவும் - ஆனாலும், தனது இந்த



முறைப்பாட்டைப் பொருட்படுத்தாமல் ஐ.நா., ஆப்கான் தேர்தல் ஆணைக்குழு என்பன விட்டுக்கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நடைபெற்றுமுடிந்த தேர்தல் நேர்மையாகவும், உண்மையாகவும் நடைபெற்று, அதில் ஹர்சாய் வெற்றி பெற்றிருந்தால் அவரை வாழ்த்துவதோடு, அவருடன இணைந்து செயற்படவும் தயாராக உள்ளேன்.

ஆனால், இந்தத் தேர்தல் மோசடிமிக்கதாக இருக்குமானால் நடைபெற்றுமுடிந்த தேர்தல் தொடர்பாகக் கேள்வியெழுப்பவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆப்கானின் முழுத தேர்தல் முடிவுகளும் இந்தமாத இறுதியில் அல்லது அடுத்தமாத முற்பகுதியிலேயே வெளிவருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தொலைக்காட்சி நிலையம்மீது நள்ளிரவு கிரனைட் தாக்குதல்!

கொழும்பு கொள்ளுப்பிட்டி காலி வீதியிலுள்ள சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிறுவனம்மீது நேற்று முன்தினமிரவு கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இரவு 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களால் வீசப்பட்ட இந்தக் கிரனைட் முன் பக்க மதிலில் விழுந்து சிதறிய போதிலும், குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்தத் தாக்குதல் ஊடகத்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டதா அல்லது வர்த்தகப் போட்டி காரணமாக மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# வா என்று சொல்லி அழைக்க நாடொன்று உருவாக வேண்டும்

## பாரிஸ் நினைவெழுச்சி நிகழ்வில் பாலகுமாரன்



(பாரிஸ்)

புலம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் போ என்று சொல்லி நாள் குறிப்பதற்கு முன்னர் வா என்று சொல்ல எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

பிரான்ஸின் பரிஸ் நகரத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற நினைவெழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும தெரிவிக்கையில் -

சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்தது. அந்த சோதனைக் காலத்தைக்கூட சாதனைக் காலமாக மாற்றியவர்கள் நாங்களே.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தை பார்த்து இன்று உலகமே வியந்து நிற்கின்றது. பேசி வெல்வதற்கும், பேசாமல் வெல்வதற்கும் அவர் தயாராக நிற்பதைப் பார்த்து, என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப்போயுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட அவர்,

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை பற்றியும், நாட்டின் தேவைகள் பற்றியும் தனது உரையில் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், ஊடகங்கள் வாயிலாக புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளை சிதைப்பதற்கு மேற்கொளளப்படும் சதி முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொணட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவரின் பன்முக ஆற்றலையும், நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் காலத்தை வென்றவன் என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்த்து இன்று ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு நகரின் முக்கிய இடங்களில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து நடத்தப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களின் வரிசையிலேயே இந்தப் போராட்டமும் நடத்தப்படவுள்ளது.

கொள்ளுப்பிட்டி, பேலிய கொட, நவலோக சந்தி, தொழில் நுட்பக் கல்லூரிச் சந்தி, மருதானை, கொச்சிக்கடை மற்றும் ஹைட்பார்க் கோணர் ஆகிய இடங்களிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

### எதிர்க்கட்சி...

அத்தோடு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைகககு எதிர்ப்புத் தெரிவித்து வந்த அரசாங்கம் இப்போது அதன் பலன்களை அனுபவித்து வருகிறது.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தெரிவிக்கப்படுகின்ற எதிர்ப்புக்களை கைவிட்டு, சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்தோடு ஜே.வி.பியும் கைகோர்த்துச் செல்லவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### ஐரோப்பிய..

மேறகொள்ளப்படவேண்டிய மனிதாபிமான உதவிச் செயற்திட்டங்களில் பெல்ஜிய அரசின் பங்களிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

பின்னர் பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய ஆணைக்குழு அலுவலகத்தில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேலி ஜோவன் ஜீனைச் சந்தித்த அரசியற்துறைப் பொறுப்பாளர், இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை முன்னகர்த்திச் செல்வதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு வழங்கும் பங்களிப்பினை அதிகரிக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்க்கட்சி வழங்குகின்ற ஆதரவினைச் சாதகமாகப் பயன்படுத்தி மீண்டும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சமாதான நடவடிக்கை தொடர்பாக தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்களைக் களைவதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைய தமிழ்மக்களது இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவாக பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் உடனடியாக வெளியேறவேண்டுமெனவும், கிழக்கில் உள்ள ஆயுதக்குழுவினருக்கு இராணுவத்தினர் உதவி மற்றும் பாதுகாப்பை வழங்குவதை உடனடியாக நிறுததவேண்டும் எனவும், இதற்கான அழுத்தத்தினை ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கை அரசுக்கு வழங்க வேண்டும் எனவும் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு பூரண ஒததுழைப்பை வழங்குமென ஐரோப்பிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜோவன் ஜீன் உறுதியளித்தார்.

### இந்திய...

புத் தொடர்பாக - இந்திய இராணுவத் தளபதி முதலில் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார் என்றும், அண்மையில் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் தொடர்ச்சியாகவே இவரது விஜயம் அமையவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் முக்கிய படைத்தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் - பலாலி விமானத் தளத்தைப் பார்வையிடவிருப்பதாகவும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

### பொலிஸ் மா...

மணியளவில் நாகவிகாரைக்குச் சென்று அங்கும் வழிபாடு களில் ஈடுபட்ட பின்னர், பலாலி விமா னப் படைத் தளத்துக்குத் திரும்பி னார்.

பொலிஸ் மா அதிபரின் வருகையினை முன்னிட்டு, யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### உயர்மட்ட...

வரும் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பதே இந்தக் குழுவின் நோக்கம் என்றும் கூறப்படுகிறது.

அவர்கள் இங்கு தங்கியிருக்கும் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் உள்ளிட்ட இலங்கையின் உயர்பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இன்றும் நாளையும் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. கடந்த முறை இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இங்கு வந்திருந்த போது ஆராயப்பட்டு முடிவெடுக்காத நிலையிலுளள விடயங்கள் குறித்து இம்முறை ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பது குறித்தே கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இந்த உடன்படிக்கையை செய்து கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் முடிவெடுக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

அத்துடன் - பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதையைப் புனரமைத்துத் தரமுயர்த்துதல், இலங்கைப் படையினருக்குத் தேவையான ஆயுததளபாடங்களை விநியோகித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆராயவுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# வட்டமடு காணிப்பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு காணப்பட்டது!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்று பிரதேசத்திலுள்ள வட்டமடு காணி தொடர்பான பிரச்சினைக்கு நேற்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு முன்னிலையில் மாவட்ட அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட விசேட கூட்டத்தில் தற்காலிக தீர்வொன்று காணப்பட்டது.

அக்கரைப்பற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில்-விடுதலைப் புலிகள் தரப்பில், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் முரளி, துணைப் பொறுப்பாளர் வினோ ஆகியோரும்,

முஸ்லிம் விவசாயிகள் தரப்பில் எம்.ஏ.அப்துல் காதர், ஐ.எம்.இப்ராகீம் மற்றும் எம்.அகமது லெப்பை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிவில் அதிகாரிகளாக அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபயவிக்கிரமவுடன் அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேச செயலாளர்களும், மாகாண காணி ஆணையாளர் ஆர். ரவீந்திரன், காணி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

குறிப்பிட்ட காணி கால்நடை மேய்ச்சல் தரைக்கு 1974 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு பின்பு சில அதிகாரிகளால் விவசாயச் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்க அதிபர் இந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார்.

இதனால் இந்தக் காணி தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி தற்காலிகமாக 300 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கு அனுமதியளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாக இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

3 மாத காலத்திற்குள் சகல ஆவணங்களும் காணி ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிக்கு அப்பால் வேறு இடத்தில் காணி வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர மேலும் தெரிவித்தார். (07)

## 23 ஈழ அகதிகள் மன்னார் வருகை!

(மன்னார்)

இராமேஸ்வரத்திலிருந்து அகதிகளாக வந்தபோது கடற்படையினரால் கைதுசெய்யபட்ட 23 பேரையும், மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம். அப்துல்லா விடுதலை செய்தார்.

இவர்களை அழைத்துவந்த படகோட்டிகள் நால்வரையும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களை நேற்று நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

இந்த அகதிகள் - யாழ்ப்பாணம், பதுளை, வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது (201).

### நிமால் கொலை...

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த அடையாள எதிர்ப்புப் போராட்டம் இன்று நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரை யாழ்.பஸ்நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### புங்கன்குள...

பொலிஸார், மோட்டார் சைக்கிளையும் மினிபஸ்ஸையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

மேற்படி விபத்துத் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மினிபஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைதுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்...

காணப்பட்டன. இந்தக் கொலைக்கு மைக்ரோ பிஸ்டல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் அண்மையில் கடை ஒன்றின் முன்பாக நின்ற வேளையில் சிலரால் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஊடகவியலாளர்
மயில்வாகனம் நிமலராஜன்

தமிழர்களின் உரிமைக்காய்
குரல் கொடுத்தாய் - அதற்கு
பேனாவை ஆயுதமாய் - உன்
கையில் எடுத்தாய்
ஆதிக்க வெறியர்களின்
துப்பாக்கிக் குண்டுகள்
சாதித்துக் காட்டிய உன்னை
சல்லடை போட்டதடா!

(இ) - நண்பர்கள்

4 NOV 2004

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.